விலை : 20.00
Website : www.val
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஐப்பசி 09 செவ்வாய்க்கிழமை (25.10.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 311

## மாணவர்களின் படுகொலையை கண்டித்து

# இன்று ஹர்த்தால்

## அனைத்துத் தரப்பு ஒத்துழைப்புடன் முன்னெடுப்பு

*(யாழ்ப்பாணம்)*

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டின் மூலம் படுகொலை செய்யப்பட்டமையை கண்டித்தும் அவர்களின் இழப்புக்கு நீதி கோரியும் இன்றைய தினம் வட மாகாணம் முழுவதும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுகிறது. (23-ம் பக்.)

## மாணவர்களின் உடல்கள் அடக்கம்


### சுலக்சனின் இறுதிக்கிரியை நேற்று



24ஆம் பக்கம் பார்க்க....

## புதிய அரசியல் சாசனம்

## இரா.சம்பந்தன் கருத்து



(மட்டக்களப்பு)

நாட்டின் புதிய அரசியல் சாசனத்தில், மாகாண மற்றும் பிராந்திய மட்டங்களில் இறைமை பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என எதிர்க் கட்சி தலைவரும், தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவருமான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று மட்டக்களப்பு கரடியனாறு விவசாய பயிற்சி நிலையத்திற்கான அடிக்கல் நாட்டும் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## தமிழர்கள் செறிந்து வாழும் பகுதியில்

## அதிகளவான சிங்களவர்கள் கடமையில் இருப்பது ஏன்?

### மாணவர்கள் கொலைக்கு அதுவும் காரணம் - விக்கிரமபாகு

(கொழும்பு)

மோட்டார் சைக்கிளில் சென்ற மாணவர்களை பொலிஸார் இடைநிறுத்தக்கோரிய போது மாணவர்கள தடுப்புச் சோதனைக்கு நிறுத்தாமல் சென்றுள்ளனர். இதனையடுத்து பொலிஸார் வாள் வெட்டுடன் சம்பந்தப்பட்டவர்கள் என கருதி மாணவர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

02ஆம் பக்கம் பார்க்க....

## கொழும்பில் இன்று ஆர்ப்பாட்டம்!

(கொழும்பு)

வடக்கில் இன்று நடைபெறும் ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்து இலங்கை ஆசிரியர் சங்கம் கொழும்பு புறக்கோட்டையில் இன்று ஆர்ப்பாட்டம்

23ஆம் பக்கம் பார்க்க....

## துப்பாக்கிச் சூடு தவறு;

### பொலிஸ் ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

ஏதேனுமொரு வாகனம் தமது ஆணையை மீறிச் சென்றால் அதன மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொள்ள பொலிஸாருக்கு அனுமதி இல்லை என தெரிவித்த பொலிஸ்



23ஆம் பக்கம் பார்க்க....

## போராட்டங்களுக்கு அரசே பொறுப்பு!

(கொழும்பு)

வடக்கில் போராட்டங்கள் இடம் பெறுவதற்கு அரசாங்கமும், பொலிஸாருமே பொறுப்புக்கூற வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அண்மையில் யாழ் பல்கலைக

23ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு சமூக நிலையை குழப்புவதற்கு முயற்சி!

### ஆளுநர் நிலுக்கா யாழில் கருத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் படுகொலையை வைத்து வடக்கிலுள்ள சமூகநிலையைக் குழப்புவதற்கு பல்வேறுபட்ட தரப்பினர் முயன்றுவருவதாக மத்திய




24ஆம் பக்கம் பார்க்க....

## மாணவர்களின் படுகொலைக்கு நீதி கோரி

## யாழ்.செயலகம், ஏ9 வீதியை மறித்து பல்கலை மாணவர்கள் நேற்று முற்றுகை



24ஆம் பக்கம் பார்க்க....

### ஜனாதிபதியிடமிருந்து பதில் கிடைக்கும்வரை

## யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் விரிவுரைகளை பகிஷ்கரிக்க முடிவு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து தமது கோரிக்கைகளுக்கு உரிய பதில் கிடைக்கும் வரையில் பல்கலைக்கழக விரிவுரைகளை புறக்கணிப்பதாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இதன்படி மறு அறிவித்தல் வரும வரை மாணவர்கள் எவரையும் பல்கலைக்கழக விரிவுரைகளுக்கு செல்ல வேண்டாம் என மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

மேலும் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களுக்கு நீதி கிடைக்காவிட்டால் போராட்டம் வேறு வடிவில் முன்னெடுக்கப்படும் எனவும்

24ஆம் பக்கம் பார்க்க....

# கேள்வி அறிவித்தல் - 2017
## கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சந்தைகள், இறைச்சிக்கடைகளை 2017.01.01 - 2017.12.31 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்படுகின்றன.

| விண்ணப்பப் படிவம் விநியோகிக்கப்படும் திகதி, நேரம். | கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி, நேரம் | கேள்வி திறக்கப்படும் திகதியும்,, நேரமும். |
|---|---|---|
| திகதி : 2016.10.26 ம் திகதி முதல் 2016.11.14ம் திகதி வரை<br>நேரம் : மு.ப.8.30 - பி.ப.3.00<br>இடம் : கரைச்சி பிரதேச சபை உப அலுவலகம் | திகதி : 2016.11.15ம் திகதி, செவ்வாய்க்கிழமை<br>நேரம் : மு.ப.10.00 மணி | திகதி : 2016.11.15ம் திகதி, செவ்வாய்க் கிழமை<br>நேரம் : மு.ப.11.00 மணி<br>இடம் : கரைச்சி பிரதேச சபை மாநாட்டு மண்டபம். |

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை செயலாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி என முகவரியிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிடப்பட்டு 2016.11.15ம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். அல்லது பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படவேண்டும்.

இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என்ற முகவரியிட்டு குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்விகள் யாவும் 2016.11.15ம் திகதி செவ்வாய்க் கிழமை மு.ப.11.00 மணிக்கு கரைச்சி பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் கேள்விச் சபையின் முன்னிலையில் திறக்கப்படும். கேள்விச் சபையின் முடிவே இறுதித் முடிவாகும்.

| இல | குத்தகை நிலையம் | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (NBT நீங்கலாக, மீளளிக்கப்பட முடியாதது) | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | **சேவைச் சந்தை – கிளிநொச்சி.** | | | |
| 01 | தராசுக்கொட்டகை – மீன் | 20,000.00 | 1,000.00 | 2,366,210.00 |
| 02 | தராசுக்கொட்டகை மரக்கறி | 20,000.00 | 1,000.00 | 3,311,000.00 |
| 03 | பழம், தேங்காய், வெற்றிலை, பாக்கு, கருவாடு, முட்டை. | 20,000.00 | 1,000.00 | 2,431,000.00 |
| 04 | மாட்டிறைச்சிக்கடை | 40,000.00 | 1,000.00 | 2,392,500.00 |
| 05 | இல.01, கோழியிறைச்சிக்கடை | 20,000.00 | 1,000.00 | 1,925,000.00 |
| 06 | இல.02, கோழியிறைச்சிக்கடை | 20,000.00 | 1,000.00 | 1,403,623.10 |
| 07 | ஆட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 274,329.99 |
| 08 | துவிச்சக்கரவண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 40,000.00 | 1,000.00 | 2,497,299.85 |
| | **பொதுச் சந்தை – பரந்தன்** | | | |
| 01 | தராசுக்கொட்டகை மீன், மரக்கறி, பழம், வெற்றிலை, பாக்கு, கருவாடு, முட்டை, துவிச்சக்கரவண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 10,000.00 | 1,000.00 | 307,328.17 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 709,511.00 |
| 03 | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 243,100.00 |
| 04 | ஆட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 99,000.00 |
| | **பொதுச்சந்தை – வட்டக்கச்சி** | | | |
| 01 | தராசுக்கொட்டகை மீன், மரக்கறி, பழம், வெற்றிலை, பாக்கு, கருவாடு, முட்டை, துவிச்சக்கரவண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 10,000.00 | 1.000.00 | 304,804,90 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை (வட்டக்கச்சி) | 10,000.00 | 1,000.00 | 574,101.00 |
| 03 | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 93,610.00 |
| | **பொதுச்சந்தை – இரணைமடு** | | | |
| 01 | தராசுக்கொட்டகை மீன், மரக்கறி, பழம், வெற்றிலை, பாக்கு, கருவாடு, முட்டை, துவிச்சக்கரவண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 10,000.00 | 10,000.00 | 307,328.17 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 10,000.00 | 1,049,730.00 |
| 03 | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 10,000.00 | 694,100.00 |
| | **பொதுச்சந்தை – உருத்திரபுரம்** | | | |
| 01 | தராசுக்கொட்டகை மீன், மரக்கறி, பழம், வெற்றிலை, பாக்கு, கருவாடு, முட்டை | 10,000.00 | 1,000.00 | 87,808.05 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை (D.10) | 10,000.00 | 1,000.00 | 279,730.00 |
| 03 | கோழியிறைச்சிக்கடை (D.10) | 10,000.00 | 1,000.00 | 112,243.34 |
| | **பொதுச்சந்தை – ஸ்கந்தபுரம்** | | | |
| 01 | தராசுக்கொட்டகை மீன், மரக்கறி, பழம், வெற்றிலை, பாக்கு, கருவாடு, முட்டை, துவிச்சக்கரவண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 10,000.00 | 1,000.00 | 307,328.17 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 302,500.00 |
| 03 | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 55,000.00 |
| | **பொதுச்சந்தை – தர்மபுரம்** | | | |
| 01 | தராசுக்கொட்டகை மீன், மரக்கறி, பழம், வெற்றிலை, பாக்கு, கருவாடு, முட்டை | 10,000.00 | 1,000.00 | 307,328.17 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 468,815.60 |
| 03 | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 107,800.00 |
| | **கல்லாறு** | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 120,285.00 |
| | **ஜெயந்திநகர்** | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 256,300.00 |
| 02 | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 151,800.00 |
| | **ஊற்றுப்புலம்** | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 182,820.00 |
| | **ஆனைவிழுந்தான்** | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 93,665.00 |
| | **கண்டாவளை** | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 107,855.55 |
| | **முரசுமோட்டை** | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 240,900.00 |
| | **அக்கராயன்** | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 79,750.00 |

### நிபந்தனைகள்.

1. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் இரத்து செய்யப்படும்.
2. கடந்தகாலக் கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளை செலுத்த தவறியவர்களும், கறுப்புப்பட்டியலில் உள்ளவர்களும் குத்தகைக் கேள்விகளில் பங்குபற்றத் தகுதியற்றவர்கள்.
3. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ, நிராகரிப்பதற்கோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு.
4. கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ள வரும் போது தம் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணத்தின் நிழற்பிரதியினை கிராம சேவையாளர் மூலம் உண்மைப் பிரதி என சான்றுறுதிப்படுத்தி சமர்ப்பிப்பதுடன் கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழையும் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
5. சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதித்தொகையினை உடனடியாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும். குறித்த தொகை புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களின் குத்தகைப் பணமாக மாற்றம் செய்யப்படும்.
6. இறைச்சிக்கடைகள் மற்றும் சந்தைகள் என்பன குத்தகைக்கு எடுப்பவராலேயே நடாத்தப்படல் வேண்டும். குத்தகைதாரர் தவிர்ந்த வேறு ஒருவரால் குத்தகை நிலையம் நடாத்தப்படின் உடனடியாக ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படுவதுடன் வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
7. இறைச்சிக்கடையினை குத்தகைக்கு எடுத்தவர் வெட்டப்பட்ட மாட்டிறைச்சியை பிரதேச சபை எல்லைக்கு அப்பால் எக்காரணம் கொண்டும் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட மாட்டாது.
8. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

**கணேசன் கம்ஸநாதன்.**
**செயலாளரும் கேள்விச் சபைத் தலைவரும்,**
**பிரதேச சபை, கரைச்சி,**
**கிளிநொச்சி.**

(C-6262)

## அதிகளவான...

குறித்த சம்பவத்தின் போது கடமையில் இருந்த ஐந்து பொலிஸாரும் சிங்களவர்களே.

இவர்களின் மொழி தெரியாமல் மாணவர்கள் குறித்த இடத்தில் நிறுத்தாமல் சென்றிருக்கலாம். தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதியில் ஏன் சிங்களவர்களை அதிகமாக கடமையில் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

இது மாணவர்களின் தவறல்ல. ஆட்சியாளர்களின் தவறாகும். இவ்வாறான சம்பவங்களினால் எவ்வாறு இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என நவ சம சமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன கேள்வியெழுப்பினார்.

பொலிஸாரின் துப்பாக்கிசூட்டில் உயிரிழந்த யாழ் பல்கலைகழக மாணவர்களின் படு கொலையை கண்டித்தும் அவர்களின் கொலைக்கான நீதி உடனடியாக வழங்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தியும் நேற்று மாலை கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன்பாக பாரிய கண்டன ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

இதன் போது கருத்து தெரிவிக்கையிலேயே விக்கிரமபாகு கருணாரட்ன மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடு முழுவதும் நல்லாட்சியை தோற்றுவிப்பதாக கூறி இனவாதத்தினை பரப்பும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்.

வட மாகாணத்தில் பொலிஸாரின் அடாவடித்தனம் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றது.

பொலிஸார் இரவு நேர கடமைகளில் இருக்கும் போது மக்களை துன்புறுத்துகின்றனர். இதற்கு எதிராக சட்டம் பயன்படுத்தப்படவே இல்லை. இதுவா நல்லாட்சியின் மிக முக்கிய பண்பு?

நல்லாட்சியிலேயே பொலிஸாரின் அடாவடித்தனம் வரலாற்றில் என்றும் இல்லாதவாறு அதிகரித்துள்ளது.

கடந்த கால அரசாங்கங்களின் ஆட்சியில் பெரிதாக இனவாதம் இருக்கவில்லை. ஆனால் மைத்திரி - ரணில் இணைந்த நல்லாட்சியில் இனவாதம் துளிர் விட ஆரம்பித்துள்ளது.

பொலிஸாரின் கட்டளைக்கு அடிபணியாவிட்டால் துப்பாக்கி சூடு மேற்கொள்ளப்படும் கலாசாரமே வடமாகாணத்தில் நிலவி வருகிறது.

ஜனாதிபதி வட மாகாணத்துக்கு சென்று நாட்டில் இனவாதம் மீண்டும் துளிர்விடாது என்றும் நாட்டை பாதுகாக்கும் முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபடுகின்றது என்றும் பொதுமக்கள் அனைவரும் பாதுகாக்கப்படுவர் எனவும் கருத்துக்களை கூறி வருகிறார்.

ஆனால் அவை பொய்யாகியுள்ளது. பொலிஸாரின் அராஜகங்களை கட்டுப்படுத்த முடியாதளவிற்கு அரசாங்கம் பலவீனமடைந்துள்ளது.

நல்லாட்சி அரசாங்கம் தோற்றுவிக்கப்பட்டு ஒன்றரை வருடங்கள் பூர்த்தியாகின்ற நிலையில் வட மாகாணத்தில் சென்று குறித்த மக்களின் துன்பங்களை கேட்க கூட இந்த அரசாங்கத்துக்கு நேரமில்லை என அவர் கருத்து தெரிவித்திருந்தார். (செ-11)

யாரிடம் பேசுவது?
யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?
எம்முடன் பேசுங்கள்.
கை கொடுக்கும் நண்பர்கள்
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
021 222 8117, 077 900 8776
வவுனியா (024) 324 4444
(C-6164) (சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)

# யாழ்.பல்கலை.மாணவர்கள் படுகொலைக்கு நீதிகோரி யாழில் அமைதிவழிப் போராட்டம்



மேலும் படங்கள் 17 பக்கம்...

### சென்னையில் இலங்கை தூதரகத்தை முற்றுகையிட்டு நேற்றுப் போராட்டம்

சென்னை நுங்கம்பாக்கத்திலுள்ள இலங்கை துணைத் தூதரகத்தை மே 17 இயக்கத்தினர் நேற்று முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணத்தில் இரண்டு பல்கலைக்கழக மாணவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதற்கு பல்வேறு தமிழ் அமைப்புக்கள் கடும் கண்டனங்களை தெரிவித்து வருகின்றன.

இந்த நிலையில் குறித்த மாணவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து மே 17 இயக்கத்தினர் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள இலங்கை துணைத்தூதரகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். (இ-7)

# கொலைக்குற்றம் சாட்டப்பட்ட 14 இராணுவத்தினரையும் மறியலில் வைக்க உத்தரவு

சிறுப்பிட்டி பகுதியில் இரு இளைஞர்கள் காணாமல்போய் கொலை செய்யப்பட்ட வழக்கில் கொலைக் குற்றம் சாட்டப்பட்ட 14 இராணுவத்தினரையும் எதிர்வரும் நவம்பர் மாதம் 6 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் எஸ்.சதீஸ்தரன் நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்.


சிறுப்பிட்டி பகுதியல் இரு இளைஞர்கள் இராணுவத்தினரால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கு சுமார் 18 வருடங்களின் பின்னர் நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அந்த வகையில் மட்டுவில் வடக்கை சேர்ந்த செல்வரத்தினம் ஜெயசீலன், நாகமணி சௌந்தரராஜன் ஆகிய இளைஞர்கள் இருவர் கடந்த 1997 ஆம் ஆண்டு ஒக்டோபர் 28 ஆம் திகதி மயிலங்காட்டு பகுதிக்கு உறவினருடைய திருமணத்துக்காக சென்றுள்ளனர்.

அவர்கள் சிறுப்பிட்டி. புத்தூர் வாதரவத்தையில் அமைந்திருந்த இராணுவ முகாமில் உள்ள இராணுவத்தினரால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தனர்.

இந் நிலையில் குறித்த வழக்கை பரிசீலித்த நீதவான் பிணை விண்ணப்பம தொடர்பான கட்டளையிடுவதற்காக 14 இராணுவத்தினரையும் 24 ஆம் திகதி (நேற்றைய தினம்) வரை விளக்க மறியலில் வைககுமாறு உத்தரவிட்டிருந்தார்.

குறித்த 14 பேரும் நேற்றைய தினம் ஆஜராகியிருந்த நிலையில் இவர்களுக்கு பிணை வழங்கும் அதிகாரம் நீதவான் நீதிமன்றுக்கு இல்லை என தெரிவித்து எதிர்வரும் நவம்பர் மாதம் 6 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார். (இ -9)









பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் படுகொலை செய்யப்பட்ட சுன்னாகம் கந்தரோடைப் பகுதியினைச் சேர்ந்த யாழ்.பல்கலைக்கழக மாணவன் விஜயகுமார் சுலக்சனின் இறுதிக் கிரியைகள் நேற்றையதினம் அவரது வீட்டில் நடைபெற்றன. இந்த இறுதி நிகழ்வில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

(படங்கள்:- உ.சாளின்)

# பங்களாதேஷின் இதயத்தை நொருங்கடித்தார் ஸ்ரோக்ஸ்

# சபீரின் எதிர்ப்புக்கு மத்தியில் இங்கிலாந்து வெற்றி

## மயிரிழையில் வரலாற்று வெற்றியை நழுவவிட்டது வங்கப்புலிகள்


சபீர் ரஹ்மானைத் தேற்றும் ஜோ ரூட்

பங்களாதேசுக்கு அணிக்கு எதிராக சிட்டாஹொங்கில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் சபீர் ரஹ்மானின் பயங்கர எதிர்ப்புக்கு மத்தியில் 22 ஓட்டங்களால இங்கிலாந்து வெற்றி பெற. மயிரிழையில் வரலாற்று வெற்றியை பறிகொடுத்தது பங்களாதேஷ்.

வெற்றிக்குத் தேவையான 286 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி விளையாடிய பங்களாதேஷ் இம்ருல் ஹெய்ஸ் (43), சபீர் ரஹ்மான் (64), அணித் தலைவர் முஷ்பிகுர் ரஹீம்(39) ஆகியோரின் பங்களிப்பின் மூலம் போராடி நேற்றைய 4ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 258 ஓட்டங்களை எடுத்திருந்தது.

சபீர் ரஹ்மான் 59, தைஜுல் இஸ்லாம் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

எனினும் நேற்றைய 5ஆவதும் இறுதியுமான நாளாட்டத்தில் சபீர் 64 ஓட்டங்களுடன் ஒருமுனையில் நிற்க, எதிர்முனையில் தைஜுல் இஸ்லாம் மற்றும் ஷபியுல் இஸ்லாம் விக்கெட்டுக்களை ஒரே ஓவரில் பென் ஸ்ரோக்ஸ் எல்.பி.முறையில் கைப்பற்றி பங்களஏதேஷின் கனவைத் தகர்த்தெறிந்தார்.

இதனால் பங்களாதேஷ் அணியின் 2ஆவது இன்னிங்ஸ் 263 ஓட்டங்களுடன் நிறைவுக்கு வந்தது. சபீர் ரஹ் மானின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் இங்கிலாந்து கடைசி வரை தனது உறுதியை விட்டுக்கொடுக்காமல் ஆடியது.

94 டெஸ்ட் போட்டிகளில் தங்களது 8ஆவது டெஸ்ட் வெற்றி மற்றும் இங்கிலாந்துக்கு எதிராக 9 டெஸ்ட்களில் முதல் வெற்றி என்ற கனவுகளை தன்னகத்தே கொண்டு ஆடிய பங்களாதேஷ் உண்மையில் அபாரமாக ஆடி இங்கிலாந்தை ஒரு கலக்கு கலக்கியதே என்றுதான் சொல்ல வேண்டும்.

வெற்றி பெற 33 ஓட்டங்கள் என்று தொடங்கிய பங்களாதேஷ் வீரர்களில் சபீர் முதலில் கவர் திசையில் 2 ஓட்டங்களை எடுக்க, தைஜுல் இஸ்லாம் ஸ்ரோக்ஸின் ஷோர்ட் பிட்ச் பந்தை விக்கெட் காப்பாளர் தலைக்கு மேல் பவுண்டரி அடித்தார். புதிய பந்து எடுக்கலாம் என்ற நிலையில் அலிஸ்ரர் குக் பழைய பந்திலேயே தொடர்ந்தார். ஏனெனில் ஸ்ரோக்ஸ் முதல் இன்னிங்ஸில் பழைய பந்தில் அபாரமாக ரிவர்ஸ் ஸ்விங் செய்தவர்.

இந்தப் போட்டியில் மொத்தம் 26 முறை டி.ஆர்.எஸ். முறையினால் தீர்ப்பு வழங்கவோ அல்லது வழங்கிய தீர்ப்பை மாற்றி அமைக்கவோ முடிந்துள்ளது. இது ஒரு சாதனையாக கருதப்படுகிறது.

81ஆவது ஓவரை வீசிய பிரோட்டின் கடைசி பந்தில் தைஜுல் சிங்கிள் எடுத்தார். இதுவே முடிவுக்கு வழி வகுத்தது. 82ஆவது ஓவரில் ஸ்ரோக்ஸ் சம்பிரதாயத்தை முடித்து வைத்தார். அடுத்தடுத்து 2 விக்கெட்டுகளை ஸ்ரோக்ஸ் கைப்பற்ற கையாலாகாத்தனத்துடனும், வேதனையுடனும் சபீர் 64 ஓட்டங்களில் ஒரு முனையில் நின்றார் வியர்த்தமாக. அந்த சிங்கிளை எடுக்காமல் இருந்திருக்கலாம். ஒரு சிறிய முடிவு ஆட்டத்தின் விதியையே மாற்றியது என்பதுதான். கிரிக்கெட் ஆட்டத்தின் ஒரு சிறப்பு வாய்ந்த குணாம்சமே இதுதான்.

இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கும் நிலையில் இங்கிலாந்து 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

இங்கிலாந்து அணியின் பந்து வீச்சில் போட்டி 3, மொயின் அலி, பிரோட், ஸ்ரோக்ஸ் ஆகியோர் தலா 2, வோக்ஸ், ரஷீத் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக இங்கிலாந்து அணியின் பென் ஸ்ரோக்ஸ் தேர்வு செய்யப்பட்டார். (க)


வெற்றிக் களிப்பில் இங்கிலாந்து வீரர்கள்

# மாணவர் படுகொலை குறித்து நேற்று பகுப்பாய்வு நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

துப்பாக்கிச் சூட்டில் பல்கலைக் கழக மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட இடத்தை அரசாங்க பகுப்பாய்வு திணைக்களத்தினரும் கொழும்பு குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரும் பகுப்பாய்வு செய்துள்ளனர்.

இந்த பகுப்பாய்வு நடவடிக் கைக்கு விசேட அதிரடிப்படை பாதுகாப்பு வழங்கியிருந்தது. கொக்குவில் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் சுன்னாகம் கந்தரோடைப் பகுதியைச் சேர்ந்த விஜயகுமார் சுலக்சன் (வயது 24), கிளிநொச்சி - இரணைமடுப் பகுதியைச் சேர்ந்த நடராஜா கஜன் (வயது 23) என்னும் இரு இளைஞர்கள் மேற்படிச் சம்பவத்தில் உயிரிழந்திருந்தனர்.

இதில் உயிரிழந்த மாணவர் ஒருவரின் இடப்பக்க விலாப் பகுதியின் ஊடாக துப்பாக்கி சன்னம் பாய்ந்து அவருடைய நெஞ்சை பிளந்து சென்றுள்ளது என பிரேத பரிசோதனை அறிக்கை தெரிவித்திருந்தது. இதனை அடுத்து சந்தேகத்தின் பேரில் ஐந்து யாழ்.பொலிஸார் கைது செய்யப்பட்டு எதிர்வரும் நவம்பர் மாதம் நான்காம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்துக்கு யாழ் நீதவான், சட்டமருத்துவ அதிகாரி, யாழ.மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டிருந்தனர்.

இந்நிலையில் நேற்றைய தினம அரச பகுப்பாய்வு திணைக்களத்தினர் மற்றும் கொழும்பு குற்றப் புலனாய்வு துறை ஆகியன ஆய்வு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது விசேட அதிரப்படை பாதுகாப்பு வழங்கியிருந்தது. (செ-4)

# வெற்றியின் விளிம்பில் பாகிஸ்தான்

பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தோல்வியைத் தவிர்க்க மேற்கிந்தியத் தீவுகள் அணி படாப்பாடுபடுகிறது.

அபுதாபியில் மேற்கிந்தியத் தீவுகள் - பாகிஸ்தான் அணிகள் மோதும் 2ஆவது டெஸ்ட் போட்டி நடக்கிறது. முதல் இன்னிங்ஸில் பாகிஸ்தான் 452, மேற்கிந்தியத் தீவுகள் 224 ஓட்டங்கள் எடுத்தன. நேற்று முன்தினம் மூன்றாம் நாள் நிறைவில், 2ஆவது இன்னிங்ஸில் பாகிஸ்தான் அணி ஒரு விக்கெட்டை இழந்து 114 ஓட்டங்களை எடுத்திருந்தது. அசார் அலி (52), அசாத் ஷபிக் (5) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று நான்காம் நாள் ஆட்டம் நடந்தது. இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த பாகிஸ்தான் அணிக்கு அசார் அலி (79) நம்பிக்கை தந்தார். அசாத் ஷபிக் அரைசதம் கடந்தார். இதனால் இரண்டாவது இன்னிங்ஸில் பாகிஸ்தான் அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 227 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.





அசாத் ஷபிக் (58), யூனிஸ்கான (29) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

456 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு லியோன் ஜோன்சன் (9) ஏமாற்றினார். டரன் பிராவோ (13), சாமுவேல்ஸ் (23) நிலைக்கவில்லை. பொறுப்பாக ஆடிய கிரெய்க் பிராத்வெயிட் (67) அரைச்சதம் கடந்து ஆறுதல் கொடுத்தார்.


நேற்றைய நான்காம் நாள் நிறைவில் 2ஆவது இன்னிங்ஸில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 141 ஓட்டங்கள் எடுத்து 285 ஓட்டங்களால் பின்தங்கி உள்ளது. பிளாகவூட் (41), சேஸ் (17) ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பில் யசிர் ஷா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இன்று இறுதி நாள் ஆட்டம் என்பதால், பாகிஸ்தான் அணி வெற்றி பெற அதிக வாய்ப்புக்கள் காணப்படுகிறது. (க)

### யாழ். மாணவர்களின் கொலையைக் கண்டித்து

# ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலையில் மாணவர்கள் நேற்றுப் போராட்டம்



யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் பொலிஸாரின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக கழக மாணவர்கள் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் நடைபெற்றது. பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பௌத்த மத குருமார் என பலர் இதில் கலந்து கொண்டனர். இதன் காரணமாக பல்கலைக கழக கல்வி நடவடிக்கைகள் நேற்று இடம்பெறவில்லை.

குறித்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் "அரசின் பொலிஸ் ...டிகள் யாழ் பல்கலைக்கழகத்தை சேர்ந்த இரு மாணவர்களை சுட்டு கொலை செய்ததை வன்மையாக கண்டிப்போம்" எனும் வாசகம் தாங்கிய பதாதைகளுடன் மாணவர்கள் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# கடும் அச்சத்தில் நாமல் நாட்டை விட்டு ஓட முயற்சி



நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கடும் அச்சத்தில் இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி ஆவார் என ஆரூடம் சொன்ன இந்திய நாட்டை சேர்ந்த குப்தா, அண்மையில் நாமலின் ஜாதகத்தை ஆராய்ந்ததாக தகவல் வெளியாகியிருந்தது.

நாமலின் ஜாதகத்தை ஆராய்ந்ததன் பின்னர் அவர் கூறிய ஆரூடத்தினால் பாரிய அச்சத்தில் நாமல் உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தாய் ஷிராந்தி ராஜபக்ஷ நாமல் ராஜபக்ஷவின் ஜாதகத்தை குப்தாவிடம் வழங்கியதன் பின்னர், தோஷங்கள் நீங்க வேண்டும் என்றால் இந்த நாட்டை விட்டு நாமல் வெளியேற வேண்டும் என குப்தா குறிப்பிட்டுள்ளார்.

2020ஆம் ஆண்டு வரையில் அவர் இலங்கையில் இருந்தால் ஒன்று சிறையில் இருக்க வேண்டும் அல்லது குடியுரிமை இரத்து செய்யப்படும் என ஜோதிடர் ஆரூடம் கூறியிருந்தார்.

எப்படியிருப்பினும் இந்த ஆரூடம் உறுதியாகும் வகையில் நாமல் ராஜபக்ஷ உட்பட நீலப்படை அணியைச் சேர்ந்த பலருக்கு எதிராக நிதி மோசடி குற்றச்சாட்டு மற்றும் பாலியல் குற்றச்சாட்டு தொடர்பில் பல முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் தற்போது வரையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதனால் அச்சமடைந்துள்ள நாமல் எதிர்வரும் நாட்களில் மத ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-7)

# தமிழ்மொழித் தினவிழாவில் ஜனாதிபதி



(கொழும்பு)

அகில இலங்கை 2016 இற்கான தமிழ்மொழித்தின தேசியமட்டத்தில் சாதனை படைத்த மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் கண்டி தர்மராஜ கல்லூரியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற தமிழ்மொழித் தின போட்டியில் கலந்து கொண்டு தேசிய மட்டத்தில் முதல் இடம்பெற்ற மட்/பட்/களுதாவளை மகா வித்தியாலய மாணவர்களினுடைய குழு நடன நிகழ்வு மேடையினை அலங்கரித்தது.

இந்நடனத்தில் பங்கேற்ற மாணவர்கள் ஜனாதிபதியுடன் இணைந்து நினைவுப் புகைப்படங்களை எடுத்துக் கொண்டனர். (இ-7)

# கொழும்பு குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் கொள்ளை

கொழும்பு குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு வந்த பெண்ணொருவரது 75 ஆயிரம்ரூபா பணத்தை ஒருவர் கொள்ளையடித்துச் சென்றுள்ளார். இச்சம்பவமானது நேற்று முற்பகல் 10.30 மணியளவில் குடிவரவு குடியகல்வு திணைக்கள தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்நிலையில் இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்றுக்காலை பெண்ணொருவர் குறித்த திணைக்களத்தில் தமக்கான சேவையொன்றை பெற்றுக்கொள்ள வந்துள்ளார். இதன்போது அவர் தமது சேவையை பெற்றுக்கொள்ளும் வகையிலான விண்ணப்பப்படிவம் ஒன்றை எழுதிக்கொண்டிருந்துள்ளார்.

இதன்போது அலுவலக உத்தியோகத்தர் போல இருந்த நபரொருவர் குறித்த பெண்ணின் தோள் பையில் இருந்த பணத்தை களவாடிக் கொண்டு தப்பிச்செல்ல முற்பட்டுள்ளார்.

இதனையடுத்து குறித்த பெண் கூச்சலிட்டபோது, பொலிஸார் குறித்த நபரை கைது செய்ய அவனை துரத்திச் சென்றுள்ளனர். இருந்த போதும் குறித்த நபர் வாகன நெரிசலை தனக்கு சாதகமாக பயன்படுத்தி அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-7)






# இராசி பலன்

**25.10.2016**

**(ஐப்பசி 09, செவ்வாய்க்கிழமை)**

**சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு**

**தசமி பிற்பகல் 5.23மணிவரை**

**மகம் பின்னிரவு 3.03 மணிவரை**

**சுபநேரம் 10.32-12.02 மணிவரை**

**இராகுகாலம் 3.02-4.32 மணிவரை**

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>திருவோணம் | | |
| செவ் | | | சந் ராகு |
| | சனி சுக் | சூரி புத | குரு |

**மீனம்** – உறவு- பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், தேக நலனில் இருந்த பாதிப்புகள் அகலும், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மேடம்** – பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**இடபம்** – பயணங்களால் பலனுண்டு, தாய்வழி உறவில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்** – கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்** – மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கடகம்** – உங்களின் மணியான யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, நன்மைகள் நடைபெறும் நாள்.

**மகரம்** – சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், போசன சுகக்குறைவான நாள்.

**சிம்மம்** – குடும்பச்சுமை கூடும் நாள், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**தனுசு** – தன்னம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்றுவீர்கள், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், பயணங்கள் கைகூடும்.

**விருச்சிகம்** – தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும்.

**துலாம்** – எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**கன்னி** – பயணங்களால் மன உளைச்சல்கள் ஏற்படலாம், தொழிலில் அதிக அக்கறை காட்ட வேண்டிய நாள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

# ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவு

(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களும் இன்னல்களும் வேதனையின் வலிகளும் மாறும் முன்பு மீண்டுமொரு முறை யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களின் அநியாய படுகொலையைக் கண்டித்தும் இனிவருங் காலங்களில் இதுபோன்ற துன்பகரமான நிகழ்வுகள் மீண்டும் இடம்பெறாமல் இருப்பதை வலியுறுத்தியும் இன்று நடைபெறுகின்ற வடக்கின் பூரண ஹர்த்தாலுக்கு வட பிராந்திய போக்குவரத்து சபையில் இயங்கும் தமிழ்த் தேசிய போக்குவரத்து ஊழியர் சங்கம், பரிபூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ



வலி.கிழக்கு பிரதேச சபை அச்சுவேலி உபஅலுவலகத்தில் கடந்த 21 ஆம் திகதி உள்ளூராட்சி மாதத்தை முன்னிட்டு நடைபெற்ற புத்தக கண்காட்சியின் போது...

# யாழ்.மாவட்ட சர்வமதப் பேரவையின் அதிர்ச்சியும் ஆழ்ந்த அனுதாபமும்

கடந்த வியாழக்கிழமை 20.10.2016 நள்ளிரவு நடந்தேறியயாழ் பல்கலைக்கழகமாணவர்களின்மரணம் பல்கலைக்கழக சமூகத்தை மட்டுமன்றி பொதுமக்களையும் மிகவும் துன்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

மரணித்த எம் மாணவச் செல்வங்களுக்கு அவர்களது ஆன்ம ஈடேற்றத்திற்கான இறையாசி வேண்டி நிற்பதுடன் அவர்களது குடும்பத்தினருக்கும் எமது இதயம் கனத்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கின்றோம்.

நம் நாட்டில் நல்லாட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இக்காலப் பகுதியிலும் கூட போர்ச்சூழலில் அனுபவித்த துன்பங்களை ஒத்த விளைவுகள் இடம்பெறுவது வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியதும் மனித விழுமியங்களுக்கு அப்பாற்பட்டதுமாகும்.

குறித்த சம்பவம் அநியாயமான உயிரிழப்புக்களைத் தவிர்த்து தவறுக்கான தண்டனையை சட்டப்படி மேற்கொண்டிருக்க வேண்டியதுதான் முறையென கருதுகின்றோம். மேலும் போரின் வடுக்கள் இன்னும் மறையாத போதே இவ்வாறான உயிரிழப்புக்கள், பெண்கள், சிறுவர் துஷ்பிரயோகங்கள், அவர்களுக்கு எதிரானவன்முறைகள் தொடர அரசோ அரச இயந்திரங்களோ இனியும் இடமளிக்கக்கூடாது என்பது யாழ்.மாவட்ட சர்வமத பேரவையின் பணிவான வேண்டுகோளாகும் என அந்த அமைப்பினர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ

# "கலங்கரை-2016" இதழுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேசத்தின் கலை, இலக்கியம், தொல்லியல், பண்பாடு ஆகியவற்றை ஆவணப்படுத்துகின்ற வகையில் வெளியிடப்படுகின்ற 'கலங்கரை' ஆண்டிதழ் இவ்வாண்டும் வெளியிடப்படவுள்ளது.

இம்மலரில் பிரசுரிப்பதற்கு காரைநகர் பிரதேசம் பற்றியதான அல்லது வாழ்ந்து கொண்டிருக்கின்ற மற்றும் மறைந்த ஆளுமைகளின் சரித்திரம், சாதனைகள் தொடர்பான ஆக்கங்கள் கோரப்படுகின்றன. டிசெம்பர் மாத ஆரம்பத்தில் வெளியிடப்படவுள்ள இம்மலருக்கான ஆக்கங்களை நவம்பர் மாத இறுதிக்குள் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது என பிரதேச செயலர் திருமதி தே.பாபு அறிவித்துள்ளார். (இ

# சட்டத்தை நிலைநாட்ட வேண்டிய பொலிஸாரின் பொறுப்பற்ற செயல்

## யாழ்.பல்கலை.விஞ்ஞான ஆசிரியர் சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 20-10-2016 வியாழக்கிழமை நள்ளிரவு காங்கேசன்துறை வீதியால் பயணித்துக்கொண்டிருந்த யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் பொலிஸாரால் பொறுப்பற்ற முறையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூடு காரணமாக பலியான சம்பவம் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக்கொள்கிறது.

அத்துடன் இதற்கு வன்மையான கண்டனத்தையும் பதிவுசெய்கிறது.

சட்டம்-ஒழுங்கை நிலைநாட்ட வேண்டிய பொலிஸார் அப்பாவி மாணவர்கள் மீது நடத்திய துப்பாக்கிச்சூடு எந்தவிதத்திலும் நியாயப்படுத்த முடியாத ஒன்றாகும். இச்சம்பவமானது இம் மாணவர்களின் குடும்பங்களை மீளாத்துயரில் ஆழ்த்தியுள்ளதோடு சக மாணவர்களிடையே கொந்தளிப்பு நிலையினையும் ஏற்படுத்தியுள்ளது.

நீண்டகால போர்ச்சூழலால் பாதிக்கப்பட்டு மீண்டு வரும் இந்நாட்களில் கடந்த காலத்தை நினைவுபடுத்தி நிற்கும் இச்செயற்பாடானது எவராலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததொன்றாகும்.

இந்நிகழ்வுடன் தொடர்புபட்டதாகக் கருதப்படும் ஐந்து பொலிஸாரின் கைது நடவடிக்கையை வரவேற்பதுடன் நீதி விசாரணைகள் நேர்மையான முறையில் நடத்தப்பட்டு குற்றவாளிகளிற்கு துரிதமாக தண்டனை வழங்கப்படும் அதேவேளை பாதிக்கப்பட்ட குடும்பங்களிற்கு நீதி கிடைக்கவேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் இச்சம்பவம் தொடர்பாக பின்வருவனவற்றை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் வலியுறுத்துகிறது.

1)எதிர்காலத்தில் பொலிஸார் துப்பாக்கிகளை மிகவும் அவதானத்துடனும் பொறுப்புடனும் கையாள்வதுடன் மீண்டும் இத்தகைய துயரச்சம்பவங்கள் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

2)தவறுகளையும் குற்றங்களையும் மூடிமறைக்க முற்படாது அவற்றை ஏற்றுக்கொண்டு குற்றமிழைத்தவர்களுக்கான தண்டனை நீதி விசாரணையின் அடிப்படையில் தாமதமின்றி வழங்கப்படல் வேண்டும்.

3) இச்சம்பவத்தின் காரணமாக பொதுமக்களைக் காக்கும் தமது கடமையில் எந்தவித பின்னடைவும் ஏற்பட பொலிஸார் இடமளிக்கக்கூடாது.

சமூக விரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் தமது கடமையை பொலிஸார் தொடர்ந்தும் பொறுப்புடன் ஆற்றவேண்டும் என யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கச் செயலாளர் அ.தேவகரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

திருமதி பத்மசோதி சீனிவாசகம்

(ஆறுமுக நாவலர் திருமுறை மண்டப ஸ்தாபகர்)

தோற்றம் 17 09 1938



மறைவு 15 11 2014

ஏடங்கை நங்கை இறையெங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும் வெண்தாமரை
பாடும் திருமுறை பார்ப்பனி பாதங்கள்
சூடு மின் சென்னிவாய் தோத்திரம் சொல்லும்

சைவ சமய பாதுகாப்பு பேரவை

# இலங்கைப் பெண்ணின் உயிரிழப்பில் மர்மம்!

குவைத் நாட்டில் வீட்டு பபணிப்பெண்ணாக தொழில் புரிந்த நிலையில் இலங்கைப் பெண் ஒருவர் உயிரிழந்த சம்பவம் சந்தேகத்திற்குரியது என அவரது உறவினர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இரண்டு பிள்ளைகளின் தாயான நிலுகா நில்மினி என்ற இந்த பெண் 2015ஆம் ஆண்டு ஜூலை மாதம் 3 ஆம் திகதி குவைத் நாட்டுக்கு சென்றார். குறித்த பெண் இந்த மாதம் ஆரம்பித்து சில நாட்களுக்கு பின்னர் தனது மகளுடன் பேசவில்லை.

இந்த நிலையில், நிலுகா தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக, நிலுகாவின் நண்பிகள் என கூறப்படும் சிலர் தெரிவித்துள்ளனர்.

மற்றுமொரு நபர் அவர் உயிரிழந்து விட்டதாக தெரியப்படுத்தியுள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் சடலத்தை இலங்கைக்கு கொண்டுவர பெண்ணின் கணவரின் விருப்பம் அவசியம் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ள போதிலும், பெண்ணை கைவிட்டு வெளிநாட்டில் இருக்கும் கணவர் அனுமதியை வழங்க மறுத்துள்ளதாக கூறப்படுகிறது.

உயிரிழந்த பெண்ணின் சிறுநீரகங்களை வைத்தியசாலை ஒன்றுக்கு வழங்க விரும்புவதாக பிள்ளைகள் கடிதம் அனுப்பினால்தான் சடலத்தை இலங்கைக்கு கொண்டு வர அனுமதி வழங்கப்படும் என அந்த நபர் தெரிவித்தார்.

இந்த நிலையில் பெண்ணின் மரணம் சந்தேகத்திற்குரியது என்பதால், அது பற்றி விசாரணை நடத்துமாறு உறவினர்கள் கேட்டுள்ளனர். (இ-7)

# சுதந்திரக்கட்சியை பாதுகாக்க நிபந்தனையின்றி இணையவும்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அழைப்பு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பாதுகாக்க கட்சியினர் அனைவரும் நிபந்தனையின்றி ஒன்றிணைய வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

கம்பஹா பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இதனிடையே மிக விரைவில எதிர்க்கட்சி என்ற நிலையில் இருந்து விலகி புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே ரணதுங்க இதனை கூறியுள்ளார். (இ-7)

# நிதி நகரத்தால் மீனவர்களுக்கு பிரச்சினை ஏற்படின் ஆராய குழு

சர்வதேச நிதி நகரத்தை நிர்மாணிப்பதன் காரணமாக மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து ஆராய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக, மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

10 பேர் கொண்ட குழுவொன்றே இவ்வாறு நியமிக்கபட்டுள்ளதாக, அந்த அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதன்படி இந்தக் குழுவில் மீனவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐவர், அமைச்சு மற்றும் வேலைத் திட்டக் குழுவிலுள்ள பிரதிநிதிகள் ஐவரும் அடங்குவதாக தெரியவந்துள்ளது.

நிதி நகரை நிர்மாணிக்கும் கட்டடம் மற்றும் கடற்பகுதிக்கு அருகிலுள்ள பிரதேச கட்டடம் போன்றவற்றை அமைக்கத் தேவையான மணலைப் பெற தற்போது சில இடங்களே அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

எனினும் இதற்கு எதிர்ப்பு வெளியிடும் வகையில் மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

எதுஎவ்வாறு இருப்பினும், இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க முன்னர் இருந்து மீனவ தொழிற்சங்கத் தலைவர்கள், மீனவர்கள் மற்றும் குறித்த வேலைத் திட்டத்துடன் நேரடியாக, மறைமுகமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டதாகவும் அந்த அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன், முன்னருடன் ஒப்பிடுகையில் பிடிக்கப்படும் மீன்களின் எண்ணிக்கையில் குறைவு ஏற்படின், அது குறித்து ஆராய்ந்து உரிய மானியங்களை வழங்க, அமைச்சர் சம்பிக்க ரணவக்க பணிப்புரை விடுத்துள்ளதாகவும் மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

# சிறுவர் தினம் பிற்போடல்

இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு நடைபெறவிருந்த சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட சர்வதேச சிறுவர் தின நிகழ்வு எதிர்வரும் 31 ஆம் திகதி (திங்கட்கிழமை)பிற்பகல் 1.30 மணிக்கு பண்ணைத்தரிப்பு இந்துக் கல்லூரியில் இடம்பெறும் என சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி என்.செல்வகுமாரி அறிவித்துள்ளார். (இ

# சரத் வீரவன்சவுக்கு மீண்டும் மறியல்



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவின் சகோதரர் சரத் வீரவன்சவை எதிர்வரும் நவம்பர் மாதம் 7 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அரச வாகனங்களை துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் வாக்குமூலமளிப்பதற்காக சரத் வீரவன்ச நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு கடந்த மாதம் முதலாம் திகதி அழைக்கப்பட்டிருந்த நிலையில், கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அமைச்சர் சஜித் பிரேமதாசவுக்கு எதிராக லஞ்ச,ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு



(கொழும்பு)

அமைச்சர் சஜித் பிரேமதாசவுக்கு எதிராக லஞ்ச, ஊழல் மற்றும் மோசடிகள் தடுப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அமைச்சர் சஜித் பிரேமதாச அண்மையில் அம்பாந்தோட்டையில் வைத்து தனது ஆதரவாளர்களுக்கு சிற்றூழியர் நியமனங்களை வழங்கும் காணொளிக் காட்சியொன்று சமூக வலைத்தளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது.

இந்நிலையில் அரசாங்க தொழில் நியமனங்களை வழங்கும் ஒழுங்குமுறைக்குப் புறம்பாக அமைச்சர் சஜித் தனது ஆதரவாளர்களுக்குத் தொழில் வழங்கியுள்ளதாக ஒரு குற்றச்சாட்டும் எழுந்துள்ளது.

அவ்வாறான முறையில் தொழில்வாய்ப்புகளை வழங்குதல் இலஞ்சம் வழங்குவதற்கு ஒப்பானது என்று இலஞ்சம் மற்றும் ஆணைக் குழுவில் இன்று முறைப்பாடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஜே.வி.பி.யின் இளைஞர் அமைப்பான சோசலிஷ இளைஞர் முன்னணியின் முக்கியஸ்தர்கள் இந்த முறைப்பாட்டை மேற்கொண்டுள்ளனர். (இ-7)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மூலம் 2
கி.பா:27 1/2
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: A/L மின்னியலாளர்
தொ.இ: B/6307

பிறப்பு: 1981 RC
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:Own Business (தனியார்)
எதிர்பார்ப்பு: விவாகரத்து பெற்றவர்
தொ.இ: B/6308

பிறப்பு: 1983 RC
நட்சத்திரம்: பரணி 1
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:O/L
தொ.இ: B/6309

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: கேட்டை 2
கி.பா: 61 1/2 செவ் 8 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:UKகடை (A/L)
தொ.இ: B/6310

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1979இந்து
நட்சத்திரம்: விசாகம்3
கி.பா: 10 1/2
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:O/L
எதிர்பார்ப்பு:சைவபோசனம் முக்கியம்
தொ.இ: G/6315

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூசம் 4
கி.பா:110 செவ் 8 இல்
உயரம்:148 cm
தகைமை/தொழில்:ஆசிரியர் (அரச)
எதிர்பார்ப்பு:உள்நாடு (அரசதொழில்)/ வெளிநாடு
தொ.இ: G/6317

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மூலம் 4
கி.பா:38 செவ் 8 இல்
உயரம்:150 cm
தகைமை/தொழில்: BSc Bio Science
எதிர்பார்ப்பு:அரச தொழில்
தொ.இ: G/6320

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா:12 3/4 செவ் 2 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSc.Acma.MBA. ERPconsultant
எதிர்பார்ப்பு:அரசதொழில்
தொ.இ: G/6324

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai jaffna@gmail.com
021 720 1005, 021 221 5434

# யாழ். பல்கலைக்கழக மாணவர்களின்

# படுகொலைக்கு நீதி விசாரணை கோரி நேற்று மாணவர்கள் திரண்டு கிளிநொச்சியில் பேரணி

## கிளிநொச்சி மாவட்ட செயலகம் கோஷங்களால் அதிர்ந்தது















யாழ். பல்கலைக் கழக மாணவர்களான நடராஜா கஜன், விஜயகுமார் சுலக்சன் ஆகியோர் கடந்த 21 ஆம் திகதி யாழ்ப்பாணம் கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியில் வைத்து பொலிஸாரினால் சுட்டு படுகொலை செய்யப்பட்டதை கண்டித்தும் பக்கச்சார்பற்ற நீதியான விசாரணை கோரியும் நேற்று கிளிநொச்சியில் பணிப் புறக்கணிப்புடன் கூடிய பேரணியொன்று நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்களின் ஒன்றியம் மற்றும் பொது அமைப்புக்கள், வர்த்தக சமூகத்தினர், பல்கலைக் கழக மாணவர்கள், அரசியல் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த பணிப்புறக்கணிப்புடன் கூடிய பேரணியானது நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமாகி ஏ-9 வீதி வழியாக நகர்ந்து கிளிநொச்சி மாவட்ட செயலகம் வரை சென்று தமது கண்டனக் கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களை ஜனாதிபதி, கிளிநொச்சி மவட்ட அரச அதிபர் ஆகியோருக்கு கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சத்தியசீலனிடம் கையளித்தனர்.

அதன்பின்னர் மாணவர்கள் எழுப்பிய கோஷங்களினால் கிளிநொச்சி மாவட்ட செயலகம் அதிர்ந்தது.

குறித்த பேரணியில் மதத்தலைவர்கள், பொது மக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், அரசியல்பிரதிநிதிகள், பழைய மாணவர்கள், வர்த்தகர்கள், சிவில் பொது அமைப்புக்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் எனப் பலரும்




கலந்து கொண்டு கறுப்புக் கொடிகளை பறக்கவிட்டு கொலைக்கு எதிரான சுலோகங்களையும் தாங்கியவாறு தமது எதிர்ப்புக்களை வெளிப்படுத்தியிருந்தனர். (2-15-312)

## மன்னாரில் நடைபெற்ற 94வது சர்வதேச கூட்டுறவு தின விழா



(மன்னார்)

மன்னார் மாவட்ட கூட்டுறவாளர்களும், கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்த 94 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா கடந்த 22 ஆம் திகதி காலை முருங்கன் டொன் பொஸ்கோ மண்டபத்தில் மன்னார் மாவட்ட கூட்டுறவு சபையின் தலைவர் சைமன் ரெட்ணசிங்கம் தலைமையில் இடம் பெற்றது.

இதன் போது முதன்மை விருந்தினர்களாக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனிஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சட்டத்தரணி எஸ்.பிரிமூஸ் சிறாய்வா,வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் மற்றும் வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், மன்னார் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஏ.செபமாலை.உட்பட கூட்டுறவு சங்க பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது வருகை தந்த கூட்டுறவாளர்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் குறித்து விரிவாக தெளிவு படுத்தப்பட்டதோடு, தமது சேவைகள் குறித்தும் தெளிவு படுத்தப்பட்டது.

அத்துடன் மன்னார் மாவட்ட கூட்டுறவாளர்களும், கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களமும் இணைந்து வருகை தந்த விருந்தினர்களுக்கு நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்தனர். (2-9)

## 12 நீர்ப்பாசனக் குளங்களின் கீழ்

# 11ஆயிரத்து 283 ஏக்கரில் நெல் பயிரிடுவதற்கு முடிவு

## வவுனிக்குள நீர்ப்பாசனத் திணைக்களத் தகவலின் படி

(மல்லாவி)

வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குட்பட்ட 12 நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் 2016-2017 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கையின் போது 11 ஆயிரத்து 283 ஏக்கரில் நெல் பயிரிடுவதற்குதீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக வவுனிக்குள நீர்ப்பாசனத் திணைக்களத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த 18, 19ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரின் பிரதிநிதியாக கலந்து கொண்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.பிரணவநாதன் தலைமையில் நடைபெற்ற நீர்ப்பாசனக் குளங்களின் காலபோக நெற் செய்கை தொடர்பான கூட்டங்களின் போது இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.




இதற்கமைய வவுனிக்குளத்தின் கீழ் 6 ஆயிரத்து 60 ஏக்கரிலும் கோட்டை கட்டிய குளத்தின் கீழ் 405 ஏக்கரிலும் அம்பலப்பெருமாள் குளத்தின் கீழ் 623 ஏக்கரிலும் புத்துவெட்டுவான் மருதங்குளத்தின் கீழ் 450 ஏக்கரிலும் தென்னியன்குளத்தின் கீழ் 850 ஏக்கரிலும் மல்லாவி குளத்தின் கீழ் 325 ஏக்கரிலும் கல்விளான் குளத்தின் கீழ் 400 ஏக்கரிலும் பனங்காமம் குளத்தின் கீழ் 300 ஏக்கரிலும் கொல்லவிளான் குளத்தின் கீழ் 262 ஏக்கரிலும் ஐயங்கன் குளத்தின் கீழ் 952 ஏக்கரிலும் தேராங்கண்டல் குளத்தின் கீழ் 300 ஏக்கரிலும் பழைய முறிகண்டி குளத்தின் கீழ் 356 ஏக்கருமாக மொத்தம் 11 ஆயிரத்து 283 ஏக்கரில்காலபோக நெற்செய்கை மேற் கொள்ளப்படவுள்ளது.

இந் நிலையில் விவசாயிகள் 3 தொடக்கம் 3 1/2 மாத நெல்லினங்களை விதைக்க வேண்டும்.

நெல் விதைப்பு ஆரம்ப திகதி இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் நவம்பர் மாதம் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரையாகும்.

கால்நடைகளைக் கட்டுப்படுத்தல் இன்று செவ்வாய்க் கிழமை தொடக்கம் எதிர்வரும் 2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் திகதி வியாழக் கிழமை வரையான காலப் பகுதியாகும் என வவுனிக்குள நீர்ப்பாசனத் திணைக்களத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

## அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில்

# மணல் ஏற்றிப் பயணித்த உழவு இயந்திரம் கைப்பற்று



### சாரதியும் கைதானார்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய பிரிவிற்குட்பட்ட மல்லாவி பொலிஸ் நிலையப் பகுதியிலுள்ள கல்விளான் கிராமத்தில் அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் ஏற்றிப் பயணித்த உழவு இயந்திரம் ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது ,

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் நேரடி வழிநடத்தலின்கீழ் முல்லைத்தீவு மாவட்ட போதைப் பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி, உப பொலிஸ் பரிசோதகர் கருணா ரத்தினம் ஜெசிந்தன் தலைமையில் பொலிஸ் அணியினரின் தேடுதல் நடவடிக்கையின் போதே மேற்படி உழவு இயந்திரம் கைப்பற்றப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்டுள்ள உழவு இயந்திரத்தையும் கைதான சாரதியையும் மேலதிக விசாரணைகளுக்காகவும் அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்குமாக மல்லாவி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக முல் லைத் தீவு மாவட்ட பொலிஸ் அத்தி யட்சகர் காரியாலயத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

## 198 இலட்சம் ரூபா செலவில்

# 5 சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிப்பு

## முல்லை. மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்குட்பட்ட ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள 5 சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் புனரமைப்பு வேலைகள் 198 இலட்சம் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் எஸ்.ஆயகுலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

மத்திய அரசின் விவசாய அமைச்சின் நிதியொதுக்கீட்டில் ஆசைப்பிள்ளைகுளம் 49 இலட்சம் ரூபா செலவிலும் ஆலடிக்குளம் 38 இலட்சம் ரூபா செலவிலுமாக மொத்தம் 87 இலட்சம் ரூபா செலவில் புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதில் ஆலடிக்குளத்தின் வேலைகள் முடிவுபெற்று குளத்தின் கீழுள்ள விவசாயிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை வடக்கு மாகாண விவசாய அமைச்சின் நிதியொதுக்கீட்டின் மூலம் ஐயங்கன் குளம் 45 இலட்சம் ரூபா செலவிலும் பனிக்கன்குளம் 47 இலட்சம் ரூபா செலவிலும் ஒலுமடுகுளம் 19 இலட்சம் ரூபா செலவிலுமாக மொத்தம் 111 இலட்சம் ரூபா செலவில் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இதேவேளை குளப்புனரமைப்பு வேலைகள் நடைபெறும் பகுதி கமக்கார அமைப்பினர் மற்றும் விவசாயிகள் வேலைகள் தொடர்பில் அவதானித்து ஏதாவது குறைபாடுகள் இருப்பின் ஒலுமடு கமநலசேவை அதிகாரிகளுக்கு அறியத் தருமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)

## பெண்ணொருவரின் மரணம் தொடர்பில்

# தலைமறைவாகி தேடப்பட்ட நபர் 25 வருடங்களின் பின் கைதானார்

(மல்லாவி)

மட்டக்களப்பில் 1991 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொலை செய்யப்பட்ட பெண்ணொருவரின் மரணம் தொடர் பில் சந்தேகத்தின் பேரில் தேடப்பட்டு வந்த நபர் ஒருவர் 25 வருடங்களின் பின்னர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் ஒட்டுசுட்டான் நகரப்பகுதியில் வைத்து ஒட்டுசுட்டான் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

மட்டக்களப்பில் கொலை செய்யப்பட்ட மரணம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் தேடப்பட்டு வந்த நபர் ஒருவர் நாட்டில் ஏற்பட்ட போர் சூழ்நிலை காரணமாக மட்டக்களப்பில் இருந்து தப்பிச் சென்று தலைமறைவாகி இருந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் நகரப் பகுதியில் கடந்த 25 வருடங்களுக்கு பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரைக் கைது செய்யும் போது இவரது தேசிய ஆள் அடையாள அட்டை வேறொரு பெயரில் பெறப்பட்டு இருந்ததாகவும் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளதாகவும் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

## முதலமைச்சரின் பிறந்தநாளை முன்னிட்டு

# வவுனியாவில் விசேட பூசை வழிபாடுகள்



(குருமன்காடு)

வடக்கு மாகாண முதலமைச்சரின் பிறந்த நாளை முன்னிட்டு அவருக்கு நீண்ட ஆயுள் வேண்டி வவுனியாவில் இடம்பெற்றுள்ளது.

வவுனியா, நாகர் இலுப்பைக்குளம் பொது மக்களின் ஏற்பாட்டில் இவ் விசேட பூஜை வழிபாடு கந்தபுரம் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெற்றது.

இதன்போது வடக்கு மாகாண முதலமைச்சருக்கு நீண்ட ஆயுள் வேண்டியும், தமிழ் மக்கள் நலன்சார்ந்து அவர் முன்னெடுத்துள்ள அரசியல், பொருளாதார நகர்வுகளுக்கு ஆசிவேண்டியும் அவரது பெயரில் அர்ச்சனை செய்து விசேட வழிபாடுகள் இடம்பெற்றன.

இந்த வழிபாட்டில் அப்பகுதியைச் சேர்ந்த பெருமளவான பொது மக்கள் கலந்து கொண்டனர். (2-250)

வில் விசேட பிரார்த்தனை இடம் பெற்றது.


வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனின் 77 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு அவருக்கு நீண்ட ஆயுள் வேண்டியும், ஆசி வேண்டியும் விசேட பூஜை வழிபாடு ஒன்று வவு

# இந்திய வீட்டுத்திட்ட வீடுகளை உடனடியாக கட்டி முடிப்பதற்கு நடவடிக்கை எடுங்கள்

## நிதியை திரும்ப விட வேண்டாம்- வவுனியா மாவட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் றிசாத் பணிப்பு

(குருமன்காடு)

**வவுனியா மாவட்டத்தில் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு கட்டி முடிக்கப்படாத நிலையில் உள்ள 53 வீடுகளையும் உடனடியாகக கட்டி முடிக்க நடவடிக்கை எடுக்குமாறும் அந்த நிதியை திரும்பச் செலவிட வேண்டாம் எனவும் கைத்தொழில் மற்றும் வாணிபத்துறை அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.**





வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முற்பகல் 10.45 மணியளவில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் ஆரம்பமானது.

இதில் கலந்து கொண்டு இந்திய வீட்டுத் திட்ட செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா மாவட்டத்தில் இவ்வருடம் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் 4 ஆயிரத்து 756 வீடுகள் வழங்கப்பட்டிருந்தன.

அதில் நான்காயிரத்து 404 வீடுகள்முழுமையாக கட்டி முடிக்கப்பட்டதுடன், 299 வீடுகளின் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

வவுனியா வடக்கில் 18, வவுனியா தெற்கில் 10, வவுனியாவில் 11, செட்டிகுளத்தில் 14 என மொத்தம் 53 வீடுகள் கட்டப்படாத நிலையில் கைவிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் தெரிவித்ததையடுத்து அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்ததாவது,

இந்திய வீட்டுத்திட்ட வீடுகள் பயனாளிகள் தெரிவு செய்தே வழங்கப்பட்டது. வீடு வழங்கப்பட்டு 53 வீடுகள் கட்டப்படவில்லை என்றால் அதற்கு அப்பகுதி கிராம அலுவலர், பிரதேச செயலாளர் ஆகியோரே பொறுப்பு.

அவர்கள் இது தொடர்பில் கவனம் செலுத்தி உடனடியாக கட்டி முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த வீடுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை திரும்பிச் செல்ல விடக் கூடாது.

இந்திய வீட்டுத்திட்ட வீடுகள் உடனடியாக முடிக்கப்பட வேண்டும். அதனை கட்டி முடிக்க நிதி போதாது என்றால் மேலதிகமாக பணத்தை வழங்கி அந்த வீடுகளை கட்டி முடிக்கவும். அந்த வீடுகளுக்கு மக்கள் இல்லை என்றால் வீடு, காணி இல்லாத வேறு மக்களுக்கு அதை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதனை ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் ஏற்றுக் கொண்டதையடுத்து இதனை தீர்மானமாகவும் எடுத்துக் கொண்டனர். (2-250)




# பொருளாதார மத்திய நிலையத்தை ஓமந்தையில் அமைப்பதற்கு முடிவு

## வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தீர்மானம்

(குருமன்காடு)

வவுனியாவில் அமைக்கப்படவுள்ள பொருளாதார மத்திய நிலையம் தொடர்பில் நேற்றுக் காலை நடைபெற்ற வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மக்கள் பிரதிநிதிகளிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டதுடன், ஓமந்தையில் அமைப்பது எனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இணைத்தலைவர்களில் ஒருவரான வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன கூறுகையில்.

பொருளாதார மத்திய நிலையத்தை ஓமந்தையில் அமைப்பது என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற மற்றும் வவுனியா மாவட்ட மாகாண சபை உறுப்பினர்கள் ஏகமனதாக முடிவெடுத்துள்ளோம்.

இருவாராங்களுக்குள் ஓமந்தையில் அமைப்பதற்கு முதலமைச்சர் நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் தாண்டிக்குளம் காணியை வழங்க வேண்டும் எனவும் தீர்மானித்துள்ளோம்.

இது தொடர்பில் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக முடிவெடுக்க வேண்டும் என கோரிக்கையை விடுத்தார்.

இதனையடுத்து வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோருக்கும் அமைச்சர் றிசாத் பதியுதீன், வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெயதிலக ஆகியோருக்கும் இடையில் கடும் வாய்த்தர்க்கங்கள் இடம்பெற்றன.

இறுதியில் குறித்த விடயத்தை எழுத்து மூலம் தருமாறு அமைச்சர் றிசாத் பதியுதீன் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கோரினார்.

தனக்கு தனிப்பட்ட ரீதியில் மதவுவைத்த குளத்தில் அமைக்க நடவடிக்கை எடுத்த பின் மாற்ற உடன்பாடு இல்லை எனவும் தாங்கள் எல்லோரும் எழுத்து மூலம் தந்தால் தான் அதனை ஏற்பதாகவும் தெரிவித்தார்.

இதனையடுத்து பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், சிவமோகன், சாள்ஸ் நிர்மலநாதன், கே.கே.மஸ்தான், சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், மாகாண சபை உறுப்பினர்களான ம.தியாகராஜா, ஜி.ரி.லிங்கநாதன், செ.மயூரன் ஆகியோர் கையொப்பமிட்டு ஓமந்தையில் பொருளாதார மத்திய நிலையத்தை அமைக்க வேண்டும் எனவும் இரு வாரங்களுக்குள் அதற்கு உரிய வேலை ஓமந்தையில் தொடங்கப்படா விட்டால் தாண்டிக்குளம் காணியை வழங்குவது எனவும் கடிதம் மூலம் வழங்கினர்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இது ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதனை உடனடியாக முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருவதாக பதில் முதலமைச்சர் த.குருகுலராசா தெரியப்படுத்தினார். இதனையடுத்து சபையில் அமைதி நிலவியது. (2-250)

## வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்குவதில் இழுபறி

(வவுனியா)

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்குவதில் இழுபறி நிலை காணப்பட்டது.

இந் நிலையில் ஊடகவியலாளர்கள், இணைந்து அரச அதிகாரிகள் ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர்களுடன் தமக்கு அனுமதி வழங்க வேண்டுமென வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர்.

அமைச்சர் றிசாத் பதியுதீன், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வடக்கு மாகாண பிரதி முதலமைச்சர் த.குருகுலராசா ஆகியோரின் இணைத் தலைமையில் நேற்று முற்பகல் 10.45 மணியளவில் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்திலேயே மேற்படி முரண்பாடு ஏற்பட்டது.

இதனையடுத்து ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இதன்போது மக்கள் சார்ந்த விடயங்களை கதைக்கும் போது ஏன் ஊடகங்களுக்கு மறைத்து கதைக்க வேண்டும். எமக்கு முழுமையாக செய்தி சேகரிக்க அனுமதிக்க வேண்டும் என ஊடகவியலாளர்கள் கோரினர்.

இதனையடுத்து அமைச்சர் றிசாத் பதியுதீன் ஏனைய அரசியல்வாதிகளையும் கேட்க வேண்டும் என கூற வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஊடகங்கள் நிற்கலாம் தானே. அதில் பிரச்சினை இல்லை என தெரிவித்தார்.

இதனையடுத்து அமைச்சர் றிசாத் பதியுதீன் ஊடகங்களுக்கு அனுமதி வழங்கினார்.

இதேவேளை, கூட்டத்திற்கு வருகை தந்த ஊடகவியலாளர்கள் 45 நிமிடங்கள் வரை கூட்ட மண்டபத்திற்குள் அழைக்கப்படாது வெளியில் காவல் நின்றமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# நெருக்கடி நிலை ஏற்படும்

## அமைச்சர் நிமால் கூறுகிறார்



கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை மூன்று மாதங்களுக்கு மூடுவதால் சில நெருக்கடியான நிலை ஏற்படக்கூடும் என போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். சிங்கள ஊடகமொன்று கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனவரி மாதம் 6ஆம் திகதி முதல் காலை 8 மணியில் இருந்து மாலை 6 மணி வரை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் மூடப்படும். இது தொடர்பில் அனைத்து விமான நிறுவனங்களுடன் கலந்துரையாடப்பட்டதன் பின்னரே நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

அவ்வாறு நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளவில்லை என்றால் சில வருடங்களில் விமானங்களை தரையிறக்க முடியாத நிலை ஏற்படும். அதனால் விமான ஓடு தளங்களை விஸ்தரிக்க வேண்டும்.

இதற்கு மாற்று வழியாக மத்தள விமான நிலையத்தை பயன்படுத்துவது என்பது கடினமான ஒரு விடயம்.

எனவே இதனால் ஏற்படும் நெருக்கடிகள் தொடர்பில் அனைத்து விமான சேவை நிறுவனங்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இன்னும் 20 வருடங்களில் மிகவும் வலுவான ஒரு விமான நிலையமாக கட்டுநாயக்க விமான நிலையம் மாற்றமடையும். தொழில்நுட்ப ரீதியில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இதன்போது பாரிய நெருக்கடிகள் ஏற்படக் கூடும்.

எனினும் அது நீண்ட கால நெருக்கடிக்கு நிலையான தீர்வு என போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்தார். (இ-7)




## 15 இலட்சம் ரூபாய் பெறுமதியான சிகரெட் சுங்கப் பிரிவிடம் சிக்கியது

சட்டவிரோதமாக டுபாயிலிருந்து இலங்கைக்கு சிகரெட்களை கொண்டுவந்த நபர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

டுபாயிலிருந்து இலங்கைக்கு நேற்று அதிகாலை 1.30 மணிக்கு வருகை தந்த விமானத்திலே குறித்த நபர் வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சந்தேகநபர் தனது பயணப்பையில் 36 ஆயிரத்து 200 சிகரெட்களை கொண்டு வந்துள்ளதாகவும் அதன் பெறுமதி 15 இலட்சத்து 20 ஆயிரத்து 400 ரூபா என சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவத்தில் கைது செய்யப்பட்ட நபர் கொழும்பைச் சேர்ந்த 39 வயதுடைய நபர் எனக் கண்டறியப்பட்டுள்ளது. (இ-7)

## சம்பிக்கவுக்கு அரச பாதுகாப்பு தொடர்பான உயர் பதவி வழங்க ஜனாதிபதி தீர்மானம்



ஜாதிக ஹெல உறுமய கட்சியின் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்கவுக்கு அரச பாதுகாப்பு சம்பந்தமான உயர் பொறுப்புகளை வழங்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இதனடிப்படையில், அரச பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு பிரிவுகளுக்கு பொறுப்புக் கூறும் செயற்பாட்டு ரீதியான பதவி ஒன்றை ஏற்படுத்த உள்ளதாக தெரியவருகிறது. இதன் பின்னர் அந்த பதவியில் சம்பிக்க ரணவக்க நியமிக்கப்படவுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.


ஆனால் அரச பாதுகாப்பு தொடர்பான உயர் பதவி ஒன்றை சம்பிக்க ரணவக்கவுக்கு வழங்குவது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு உடன்பாடு இல்லை என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. (இ-7)

# குழந்தைகளின் கண் பாதுகாப்பு



பிறந்த குழந்தையின் கண்கள் சிறியதாக இருக்கும். குழந்தை பெரும்பான்மையான நேரத்தில் உறக்கத்தில் இருக்கும். பிறந்தவுடன் குழந்தைகளின் கண்கள் தூரப் பார்வை என்ற நிலையில் இருக்கும். வெளிச்சத்தைப் பார்க்கையில் கண்கள் கூசுவதைப் போல சுருக்கும். சில சமயம் குழந்தைகளின் கண்கள், திடீரென்று மாறுகண் போல கண்களை உள்நோக்கி வைத்துக் காண்பிக்கும். இதற்கெல்லாம் பயப்படவேண்டாம். பச்சிளம் குழந்தையின் கண்களின் வளர்ச்சி, உடம்பில் உள்ள மற்ற பாகங்களை விட வேகமாகவே இருக்கும். நான்கு வயதிற்குள் 80 சதவிகித வளர்ச்சி இருக்கும். கண்ணின் உருவ வளர்ச்சி ஏற்படும் போது தான் அது இயல்பான நிலையை எட்டும்.

குழந்தை பிறந்து 6 மாதத்திலிருந்து 9 மாதம் வரை தங்களது கண்களை. மூக்கை நோக்கிக்கொண்டு செல்வது மிகவும் இயல்பு. அது வளர வளர இது குறைந்து கொண்டே வந்து பின்னர் இயல்பாகி விடும். மேலும் குழந்தை அழுதால் 3 மாதங்கள் வரை சத்தம்தான் வரும் கண்ணீர் வராது. சில சமயம் அதன் கண்களில் கண்ணீர் வந்தால் அநேகமாக




இது கண்ணீர்ப்பை அடைப்பு இருந்தால் வரும். கண்ணீர்ப்பை என்பது மூக்கும் கண்ணும் சந்திக்கும் இடத்தில் இருக்கும்.

கண்ணீர்ப்பை அடைப்பு ஏற்படும்போது. குழந்தையின் கண்ணில் கண்ணீர் தேங்கி நிற்கும். சில நேரம் வடியும். கண்களில் பூளை தள்ளும். இமையெல்லாம் ஒட்டிக் கொள்ளும். உடனடியாக கண் வைத்தியரை அணுகினால். அவர் சில சொட்டு மருந்துகளைக் கொடுத்து. கண்ணீர்ப்பையை மசாஜ் செய்வது எப்படி என்று சொல்லித் தருவார். இதைச் செய்து கொண்டே இருந்தால்குழந்தை வளர வளர. சரியாகிவிடும். ஒன்பது மாதத்திற்குப் பின்னரும் கண்களில் நீர் வடிந்தால் கண் வைத்தியரிடம் தூக்கிச் செல்ல வேண்டும். அதன்பிறகு குழந்தை பளீரென்ற கண்களுடன் நம்மைப் பார்த்துச் சிரிக்கும்.

சில குழந்தைகள் வளரும் போது தன் நகத்தால் தன் கண்களை குத்திக் கொள்ளும். கண்கள் சிவந்துவிடும் இதனால் ஒன்றும் ஆகாது. வைத்தியர் பரிந்துரைக்கும் சொட்டு மருந்துகளை ஒரு வாரம் அல்லது பத்து நாட்கள் போட்டு வர. சரியாகிவிடும்.

குழந்தைகளுக்கு மூன்றிலிருந்து ஐந்து வயதுக்குள் கண் பரிசோதனை செய்து கொள்வது அத்தியாவசியமானதாகும். குழந்தையின் கண்கள் பார்ப்பதற்கு அழகாகவும் இயல்பாகவும் தெரிந்தாலும் கூட மூன்றிலிருந்து ஐந்து வயதிற்குள் கட்டாயம் கண் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். இதனால் எவ்வளவோ பார்வை இழப்பை நாம் தடுக்க முடியும். குழந்தைகளின் கண்களில் உள்ள குறைபாட்டை ஐந்து வயதிற்குள் கண்டுபிடித்து சரி செய்துவிட வேண்டும். பார்வைக் குறைபாடுகள் இருந்தால் கண்ணாடி போட்டு. தெளிவான பார்வை கண் நரம்பில் விழுமாறு செய்ய வேண்டும்.

### காது

காது வழியாக நாம் சத்தத்தைக் கேட்பதால்தான் பேச முடிகிறது. குழந்தைகள் சத்தத்தை உணர்ந்துதான் பேசவே ஆரம்பிக்கின்றன. பிறவியிலேயே செவிடாகப் பிறக்கும் குழந்தை ஊமையாகிவிடுவதும் இதனால் தான்.

### காது அடைப்பு

காது வலி எதனால் ஏற்படுகிறது என்றால் ஒரு சத்தம் உண்டாக்கப்பட்டவுடன் அந்த சத்தம் காற்றில் பரவி வந்து நமது வெளிக்காதின் வழியாக உள்ளே நுழைந்து காதுக்குள் ஒரு பேப்பரின் திண்மை அளவே உள்ள சவ்வை அசைக்கிறது. உடனே அது நடுக்காதிலிருக்கும் மனித உடலின் மிகச் சிறிய எலும்புகளான மெல்லன்ஸ், இன்கஸ், ஸ்டெப்ஸ் என்கிற மூன்று எலும்புகளை அசைக்கிறது. அதில் ஸ்டேட்டஸ் எலும்பினால் அதிர்வு தரப்பட்டு உள்காதிலுள்ள திரவம் அசைகிறது. அப்போது செவி நரம்பு தூண்டப்பட்டு அதிலிருந்து மின்சார பாய்ச்சல் மூலமாக டம்ளர் விழுந்த சப்தம் நம் மூளைக்கு வந்து நாம் அந்த சத்தத்தை உணர்கிறோம்.

எப்பொழுதும் நம் வெளிக்காதுக்கும் உள் காதுக்கும் என இரண்டு பக்கமும் சரியான அழுத்தம் இருக்க வேண்டும். அப்படியில்லாமல் அழுத்தம் மாறினால் காது அடைச்சலும் வலியும் ஏற்படுகிறது.

குழந்தை தொடர்ந்து வீறிட்டு அழுதால் உடனடியாக வைத்தியரிடம் அழைத்துச் செல்லுங்கள்.

### காதுகளைப் பாதுகாக்க

காதுக்குள் இயற்கையாகவே வாக்ஸ் என்கிற திரவம் சுரப்பதால் அழுக்கு தானே வெளியாகிவிடும். அதனால். காதுக்குள் குச்சி. பட்ஸ் விட்டு சுத்தம் பண்ணுதல் கூடாது. குழந்தையை குளிப்பாட்டியாவது துண்டின் நுனியால் மென்மையாக அழுக்கை நீக்கிவிடவேண்டும். காதுக்குள் குடைவது கூடாது. காதுகள் 80 இலிருந்து 85 டெசிபல் வரைதான் சத்தத்தை தாங்கும் சக்தியுள்ளது என்பதால் அதற்கும் அதிகமான சத்தத்தை குழந்தைகள் அருகே தவிர்ப்பது நல்லது.

சைனஸ். டான்சில். தாடை எலும்பில் பிரச்சினை என்றாலும் காது பாதிக்கும் என்பதால் இப்பிரச்சினைகளை உடனே கவனிக்க வேண்டும்

பயணத்தின்போது ரேடியோ. டேப் போன்ற இரைச்சலான சத்தத்தை தவிர்க்க வேண்டும். ஏதாவது பிரச்சினை என்றால் உடனடியாக அருகில் உள்ள வைத்தியரிடம் காண்பிக்க வேண்டும்.

# ஹைமா புயலால் சீனாவின் குவாங்டாங் மாகாணத்தில் 16 லட்சம் மக்கள் பாதிப்பு





(பீஜிங்)

சீனா தென் பகுதியை தாக்கிய ஹைமா தைபூன் புயலால் 16 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டை தொடர்ந்து சீனாவின் தென் பகுதியை ஹைமா தைபூன் புயல் கடந்த வெள்ளிக்கிழமை கடுமையாக தாக்கியது. இதில் குவாங்டாங் மாகாணம் அதிக அளவில் பாதிப்புக்குள்ளானது.

இந்த புயலால் 16 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு சிவில் விவகாரத் துறை தெரிவித்துள்ளது.

சுமார் 6 இலட்சத்து 68 ஆயிரம் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். உயிரிழப்பு மற்றும் காயங்கள் தொடர்பான எவ்வித தகவலும் இன்னும் வெளியாகவில்லை.

2,749 வீடுகள் சேதமடைந்துள்ளன. ஒரு இலட்சத்து 78 ஆயிரம் ஹெக்டேயர் அளவிலான பயிர்கள் நாசமாகின. 517 மில்லியன் டொலர் அளவில் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளதாக சிவில் விவகாரங்கள் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புயல் பாதிப்பை தொடர்ந்து சீன அரசு அதிகாரிகள் துரிதமாக பேரிடர் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதனால்சனிக்கிழமை அன்றே 95.5 சதவீதம் மின்சார பாதிப்பு சீரமைக்கப்பட்டது. (இ-7)

## குடியேறிகள் வெளியேற்றம்

பிரான்ஸில் குடியேறிகள் காலேஸ் பகுதியில் உள்ள முகாமை விட்டு விரைவில் வெளியேற வேண்டும் என பிரான்ஸ் அதிரடி உத்தரவிட்டுள்ளது.

வனப்பகுதிக்கு அருகே இருக்கும் குறித்த முகாம் மோசமான நிலையில் உள்ளதால் பிரான்ஸ் இந்த அதிரடி முடிவை எடுத்துள்ளது.

அதிகபடியானோர் வசித்து வரும் குறித்த முகாமில் சுமார் 10,000 பேர் பிரித்தானியா செல்லும் விருப்பத்தில் உள்ளதாக கூறப்படுகிறது.

குடியேறிகளை வெளியேற்ற, படைகளை பிரயோகிக்க விரும்பவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இருப்பினும் குடியேறிகள் முகாமைவிட்டு போக மறுத்தால் தாங்கள் தலையிட நேரிடும் எனவும் எச்சரித்துள்ளனர்.

அங்குள்ள குடியேறிகள் பிரான்ஸின் பிற இடங்களில் இருக்கும் வரவேற்பு மையங்களுக்கு பேருந்துகள் மூலம் அழைத்துச் செல்லப்படுவார்கள் என்றும் அங்கு அவர்கள் தஞ்சம் கோர விண்ணப்பிக்கலாம் எனவும் பிரான்ஸின் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. (இ-7)




# பேருந்து-லொறி மோதி விபத்து

## 13 பேர் பலி!30 பேர் படுகாயம்




தெற்கு கரோலினாவிற்கு சுற்றுலா சென்ற பேருந்து ஒன்று வேகமாக வந்த லொறி ஒன்றுடன மோதியதில் 13 பேர் உயிரிழந்துள்ளதுடன், 30 பேர் படுகாயமுற்றுள். ளதுக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காயமுற்றோரில் சிலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளமையால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கக் கூடும்என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த விபத்து நேற்று முனதினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வேளையில். பாம் ஸ்பிரிங்ஸ் பகுதிக்கு அருகாமையில் ஏற்பட்டுள்ளது.

இந்தக் கோர விபத்தில் பாதிக்கப்பட்ட பல பயணிகள் லத்தீன் அமெரிக்காவை சேர்ந்தவர்கள் என பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

விபத்துக்குள்ளான பேருந்து லொஸ் ஏஞ்சலிஸிற்கு சென்று கொண்டிருந்த வேளையிலேயே இந்த எதிர்பாராத விபத்து ஏற்பட்டுள்ளது. குறித்த விபத்திற்கான சரியான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், விசாரணையாளர்கள் விபத்து ஏற்பட்ட பகுதியில் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

காயமடைந்தோரை காப்பாற்றும் பொருட்டு சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற மீட்புப் படையினர். ஏணிகள் மற்றும் கயிற்றின் துணை கொண்டு பேருந்துக்குள் சென்றதாகவும் காயமுற்றோரை பாதுகாப்பாக மீட்டெடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7-10)

## சோமாலிய தலைநகரில் கார்க்குண்டு தாக்குதல்



(மொஹாதிஷு)

சோமாலியாவின் தலைநகர் மொஹாதீஷுவில் (Mogadishu) நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட கார் குண்டுத் தாக்குதலில் மூவர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் படுகாயமுற்றுள்ளனர்.

குறித்த தற்கொலை கார் குண்டுத் தாக்குதல் மொஹாதீஷுவில் இடம்பெயர்ந்த மக்கள் அதிகளவில் வாழும் பகுதியான ஹொன்வேர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த மாவட்டத்தில், யுத்தம் காரணமாக வேறு நாடுகளில் இருந்து இடம்பெயர்ந்து வந்த சுமார் நூற்றுக்கணக்கான மக்கள் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த தாக்குதலுக்கு இதுவரை எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், குறித்த தாக்குதலுக்கு அல் ஷபாப் போராளிகள் குழுவே காரணமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

சோமாலியாவில், அல் ஷபாப் போராளிகள் பல கொடூரத் தாக்குதல்கள் மற்றும் குண்டுவெடிப்பு சம்பவங்களை நிகழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கணக்காய்வாளருடன் பிரதியமைச்சர் தர்க்கம்

(கொழும்பு)

மத்திய வங்கி யின் பிணைமுறிகள் தொடர்பான கணக்காய்வு அறிக்கை தொடர்பில் பிரதியமைச்சர் ஒருவரால் கணக்காய்வாளர் நாயகம் அச்சுறுத்தப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

குறித்த சம்பவம் கோப் குழு கலந்துரையாடலின் போதே இடம்பெற்றுள்ளது. இதன் போது, அர்ஜுன் மகேந்திரனை பாதுகாக்கும் நோக்கில் பிரதியமைச்சர் அஜித் பெரேரா, கணக்காய்வாளர் நாயகத்துடன் கடுமையான வார்த்தைகளில் தர்க்கம் செய்துள்ளார்.

மத்திய வங்கியின் பிணைமுறிகள் மோசடி தொடர்பில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனுக்கு எதிரான முறையில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும், நீ ஒன்றும் புத்தர் அல்ல, கடவுளும் அல்ல. நீ சொல்வதை நாங்கள் கேட்கப் போவதும் இல்லை. நாங்கள் எங்களுக்குச் சரியெனப்பட்டதைத் தான் செய்யப் போகின்றோம் என்று பிரதியமைச்சர் அஜித் பெரேரா ஏக வசனத்தில் கணக்காய்வாளரைத் திட்டியுள்ளார்.

இந்த சம்பவம் கோப் குழு உறுப்பினர்களை கடும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. (இ-7)




## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 879

### அபிவர்மன்

அது ஏன்டா என்னை பார்த்து அந்த கேள்வியை கேட்ட?
அப்படி என்னண்ணே அவன் கேட்டான்?
இப்படி போட்டு அடிக்குறீங்க?



தொடரி படத்துல 120 Km Speed இல போன Train மேல் நின்னுட்டிருந்த கீர்த்தி சுரேஷ் பாவாடை ஏன் பறக்கலைன்னு கேக்குறான்பா..

### துஷாந்தன்




பச்சோந்தி ஒன்று தற்கொலை செய்யும் முன் ஒரு கடிதத்தில் இப்படி எழுதி இருந்தது... நிறம் மாறும் போட்டியில் மனிதர்களிடம் நான் தோல்வி அடைந்தேன்...!

### அன்ரனி

ஆசிரியர் தனது மாணவர்களிடம் யாரெல்லாம் சொர்க்கத்துக்கு போகனும் என்று ஆசைப்படுகிறீங்க என்று கேட்டார். எல்லா மாணவர்களும் கையை தூக்கினார்கள் ஒருவனை தவிர. ஆசிரியர் அந்த மாணவனிடம் கேட்டார் எல்லோரும் சொர்க்கத்துக்கு போகனும் என்று ஆசைப்படுறாங்க உனக்கு மட்டும் ஆசை இல்லையா? அதுக்கு அந்த மாணவன் சொன்னான். எங்க அம்மா ஸ்கூல் விட்டதும் நேர வீட்டுக்கு தான் வரனும் என்று சொல்லியிருக்காங்க. அந்த பச்ச மண்ணு வேற யாரும் இல்ல நான் தான்.

### பகிஜா




### றொபின்சன்




### ராதி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri ... புங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பி...

# மருத்துவ உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு




சிங்கப்பூர் லீ பௌண்டேசனால் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு ஒரு தொகுதி மருத்துவ உபகரணங்களைக் கையளிக்கும் நிகழ்வு நேற்றையதினம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக அமைந்துள்ள மருத்துவ மாணவர்களுக்கான விடுதி மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.
(படங்கள்:- பொ.சோபிகா)

## நாடளாவிய ரீதியில் கடந்த பத்து மாத காலப்பகுதியில் 43ஆயிரத்து 895 டெங்குநோயாளர்கள் இனங்காணல்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கடந்த 10 மாத காலப்பகுதியில் 43 ஆயிரத்து 895 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதிக டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலே கண்டறியப்பட்டுள்ளதாகவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இது குறித்து அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது.

கடந்த 10 மாத காலப் பகுதியில் நாடு முழுவதும் 43 ஆயிரத்து 895 டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கொழும்பு மாவட்டத்தில் 13.669 பேரும் கம்பஹா மாவட்டத்தில் 5702 பேரும் களுத்துறை மாவட்டத்தில் 2.917 பேரும் டெங்கு நோயாளர்களாக கண்டறியப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் 1.849 பேரும் குருநாகலில் 2.139 பேரும் கண்டி மாவட்டத்தில் 3.541 டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை. மக்கள் டெங்கு நோய் தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சுற்றுப்புற சூழலை சுத்தமாக வைத்திருப்பதுடன் மழை நீர் தேங்கக்கூடிய காரணிகளை அப்புறப்படுத்துமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் டெங்கு நோய் தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தும் விசேட வேலைத் திட்டம் சகல மாவட்டங்களிலும் பிரதேச காரியாலயங்களினூடாக முன்னெடுக்கப் படவுள்ளது.

இந்நிலையில் 3 நாட்களுக்கு தொடர்ந்தும் காய்ச்சல் இருப்பின் உடனடியாக வைத்திய ஆலோசனையை பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (இ-7)

## இரண்டு பிள்ளைகளை கூரிய ஆயுதத்தால் தாக்கி விட்டு தற்கொலைக்கு முயன்ற தாய்

(கொழும்பு)

தனது இரு பிள்ளைகளை கூரிய ஆயுதத்தால் தாக்கி விட்டு தற்கொலைக்கு முயன்ற பெண் ஒருவர் பதுளை நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவர் மடுல்சீமை பகுதியைச் சேர்ந்த 30 வயதான பெண் எனத் தெரியவந்துள்ளது.

மேலும். சம்பவத்தில் இரு மாதங்களேயான அப் பெண்ணின் மகன் மற்றும் இரண்டரை வயதான மகளுமே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

முதலில் தனது பிள்ளைகளை கூரிய ஆயுதத்தால் தாக்கிய அவர். பின்னர் அதே ஆயுதத்தை பயன்படுத்தி தன்னையும் காயப்படுத்திக் கொண்டுள்ளார்.

இதனையடுத்து அப் பகுதி மக்கள் இது குறித்து பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

பின்னர் பொலிஸார் அப் பகுதிக்கு சென்று மூவரையும் பதுளை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து. மடுல்சீமை பொலிஸார் வழங்கிய தகவலுக்கு அமைய பதுளை நீதவான் ருவன்திகா மாரசிங்க சந்தேகநபரான பெண்ணை எதிர் வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதேவேளை அப் பெண் மன ரீதியான பாதிப்புக்கு உள்ளானவராக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இவர் தற்போது பொலிஸ் பாதுகாப்பின் கீழ் பதுளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (இ-7)

# தமிழ் சினிமா வரலாறு

## தேவருக்கு எம்.ஜி.ஆர்.'நோட்டீஸ்' 282

### நாகிரெட்டி உதவி

தேவரின் நேர்மை, நாணயம், திறமை பற்றி அறிந்திருந்த நாகிரெட்டி படத் தயாரிப்புக்கு தேவயையான பணத்தை கொடுக்க முன்வந்தார். படத்தின் நெகடிவ் உரிமையை வாங்கிக் கொண்டு பணம் தந்தார்.

படம் வேகமாக வளர்ந்தது. படத்தில் இடம்பெற்ற நட்சத்திரங்களுடன் முரட்டுக்காளை ஒன்றும் நடித்தது.

04.09.1956இல் வெளிவந்த தாய்க்கும் பின் தாரம் சுப்பர் ஹிட் படமாக அமைந்தது.

முதல் படமே வெற்றிப் படமாக அமைந்ததால் தேவர் உற்சாகம் அடைந்தார். அடுத்த படத்தையும் எம்.ஜி. ஆரை வைத்துத் தயாரிக்கத் திட்டமிட்டார்.

ஆனால்...

தாய்க்குப்பின்தாரம் படத்தை தெலுங்கில் மொழி மாற்றம் (டப்பிங்) செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து சின்னப்ப தேவருக்கு எம்.ஜி. ஆர். வக்கீல் நோட்டீஸ் அனுப்பினார்.

தேவர் பிலிம்ஸ் முதல் தயாரிப்பான தாய்க்குப் பின் தாரம் நூறு நாட்களைக் கடந்து வெற்றிகரமாக ஓடியதால் அந்தப் படத்தை தெலுங்கில் டப் செய்ய நாகிரெட்டி முடிவு செய்தார். தாய்க்குப்பின் தாரம் படத்தின் நெகட்டிவ் உரிமை அவரிடம் தான் இருந்தது.

### குரல் இரவல்

பொதுவாக டப்பிங் படங்களுக்கு அதற்கென உள்ள டப்பிங் கலைஞர்கள் குரல் கொடுப்பது வழக்கம். அதன்படி எம்.ஜி.ஆருக்கு தெலுங்கு டப்பிங் கலைஞர் குரல் கொடுத்தார்.


இந்த தெலுங்கு டப்பிங் படம் ஆந்திராவில் திரையிடப்பட்டு வெற்றிகரமாக ஓடியது.

### எம்.ஜி.ஆர்.நோட்டீஸ்

தன்னிடம் அனுமதி பெறாமல் தாய்க்குப்பின் தாரம் படத்தை தெலுங்கில் டப் செய்வதற்கு எம்.ஜி.ஆர். எதிர்ப்பு தெரிவித்தார். குறிப்பாக வேறொருவரைக் கொண்டு தனக்கு குரல் கொடுக்கச் செய்வதற்கு கண்டனம் தெரிவித்து தேவர் பிலிம்ஸ்சுக்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பினார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த சின்னப்ப தேவர் வக்கீல் நோட்டீசை நாகிரெட்டியிடம் கொண்டு போய்க் காட்டினார்.

எம்.ஜி.ஆர்.நோட்டீசுக்கு தன் வக்கீலைக் கொண்டு காரசாரமாக பதில் அனுப்பினார் நாகிரெட்டி.



சிங்கத்தின் மீது சவாரி செல்கிறார், சின்னப்ப தேவர்.

இதன் காரணமாக எம்.ஜி. ஆருக்கும் தேவருக்கும் இடையே மனத்தாங்கல் ஏற்பட்டது.

எம்.ஜி.ஆரை வைத்து தேவர் தனது இரண்டாவது படத்தைத் தயாரிக்க இயலாமல் போய்விட்டது.

எனினும் தேவரின் திறமையிலும் நாணயத்திலும் பெரிதும் நம்பிக்கை கொண்ட நாகிரெட்டி நீங்கள் தொடர்ந்து படம் தயாரியுங்கள். நெகடிவ் உரிமையை நாங்களே வாங்கிக் கொள்கிறோம் என்று உச்சாகப்படுத்தினார்.

### ரஞ்சன்

சந்திரலேகா படத்தின் மூலம் பெரும் புகழ் பெற்ற ரஞ்சன் இந்தியில் வீரதீரச் செயல்கள் நிறைந்த பல படங்களில் நடித்து முடித்து விட்டு மீண்டும் சென்னைக் குத் திரும்பி ஓய்வு எடுத்து வந்தார். அவரை கதாநாயகனாக வைத்து படம் தயாரிக்க தேவர் முடிவு செய்தார். (தொடரும்)

# சட்டவிரோத ஆட்கடத்தல்களை தடுக்க அரசு விசேட நடவடிக்கை

(கொழும்பு)

**சட்டவிரோத ஆட்கடத்தல்களை தடுக்க அரசாங்கம் விசேட நடவடிக்கை எடுத்து வருகின்றது.இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம் இது தொடர்பில் விசேட பிரிவு ஒன்றை நிறுவியுள்ளது.**

சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் புலனாய்வுப் பிரிவினரும் சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை தடுக்க நடவடிக்கை எடுத்து வருவதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தூதரக அதிகாரிகளுடன் கொழும்பில் நடத்திய சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்தார். சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமான முறையில் ஆட்கடத்தல்கள் மேற்கொள்ளப்படுவதனை தடுக்கும் நோக்கில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் அதிகளவு பணியாளர்கள் குவிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சில அரச நிறுவனங்களின் ஊடாக சட்டவிரோத ஆட்கடத்தல்களை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். (இ-7)

# உள்ளூராட்சி உறுப்பினர்களை கூட்டணியாக்கும் நடவடிக்கை நாடு முழுவதும் வெற்றியாம் - பசில்

(கொழும்பு)

மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை உறுப்பினர்களை கூட்டணியாக்கும் நடவடிக்கை நாடு முழுவதும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் விளைவாக புதிய அரசியல் சக்தி, புதிய கட்சி அல்லது புதிய கூட்டணி என்பவற்றில் ஒன்றாக மிக விரைவில் கூட்டு எதிர்க்கட்சி வெளிவரும் என முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அரச தலைவர்களுக்கு இன்று நாட்டு மக்களின் பிரச்சினைகள் குறித்து கவனமில்லை. வெளிநாட்டுக்குச் செல்லும் ஒரு தலைவர் அங்கு சொக்லேட் சாப்பிட்டு விட்டு தனது மனைவிக்கும் ஒன்றை கொண்டு வருகின்றார்.

நாம் அரசாங்கம் அமைப்பது நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்வதற்காகும். மாறாக, பழிவாங்குவதற்கு அல்ல எனவும்



அவர் நேற்று முன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.(இ-7)

# இந்த அரசை நீண்ட நாள் நிலைக்க விடமாட்டோம் ரோஹித எம்.பி.விளக்கம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமைத்த பாதையை அரசாங்கத்திலுள்ள இரு பிரதான கட்சிகளின் அமைச்சர்களும் போட்டி போட்டுக் கொண்டு தனித்தனியாக திறந்து வைக்கும் ஒரு நிலைமையில் நல்லாட்சி அரசு காணப்படுகின்றது என கூட்டு எதிர்க் கட்சி சார்பு பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

செய்து முடித்த பாதையின் ஒரு பகுதியை அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவும் மற்றொரு பகுதியை ஸ்ரீல.சு. கட்சியின் அமைச்சரும் திறந்து வைக்கின்றனர்.

அதேபோன்றுதான், அமைச்சர் சஜித் பிரேமதாச உயரம் பார்த்து அரச தொழில் வழங்கிக் கொண்டிருக்கின்றார். உயரமானவர்களுக்கு ஒருவகையான தொழில், கட்டையானவர்களுக்கு இன்னுமொரு பதவி. இதுதான் நல்லாட்சி அரசாங்கம். இந்த அரசாங்கம் நீண்ட நாள் நிலைக்காது. நிலைக்கவும் விடமாட்டோம் எனவும் ரோஹித எம்.பி. மேலும் தெரிவித்தார். (இ-7)

# 2020 வரை இந்த அரசை இழுத்துச் செல்ல முடியாது

## முன்னாள் அமைச்சர் குமார வெல்கம கூறுகிறார்

ஸ்ரீல.சு.கட்சியினர் புதிய சட்ட மூலமொன்றைக் கொண்டு வரும் போது, வெற்றிலையை ஏந்திக் கொண்டு மகிந்த ராஜபக்ஷவுடன் வந்து சேர்ந்து கொள்ளும் காலம் வெகு தொலைவில் இல்லையெனவும், 2020 வரை இந்த அரசாங்கத்தை இழுத்துச் செல்ல முடியாது எனவும் கூட்டு எதிர்க்கட்சி சார்பு எம்பியும் முன்னாள் அமைச்சருமான குமாரவெல்கம தெரிவித்தார்.

புதிய கட்சியின் சின்னம் இம்மாத இறுதியில் வெளியிடப்படும். எமது ஒரே எதிர்பார்ப்பு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இவ்வருட இறுதிக்குள் நாட்டின் சிம்மாசனத்தில் ஏற்றுவதாகும். எந்த இலையை தந்தாலும் வாங்கலாமா பார்த்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு இம் மாத இறுதிக்குள் எதுவென் பதை அறிவிப்போம் எனவும் நேற்று முன்தினம் களுத்துறையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)



# இன்று ஒரு தகவல்

## உங்களுக்குத் தெரியாதது இல்லை

நம்மைவிட வயதில் மூத்தவர்களிடமும் அனுபவம் வாய்ந்தவர்களிடமும் தகுதி நிறைந்தவர்களிடமும் பேசும் போது நாம் மிகுந்த கவனத்துடன் செயற்பட வேண்டியுள்ளது.

அதிலும் குறிப்பாக இவர்கள் சறுக்கி விழ நேரிடும் போது நாம் யோசனை சொல்ல வேண்டிய அவசியம் நேரலாம்.

சிலர் சரியென்று கேட்டுக் கொள்வார்கள்.

சிலரோ இவர்கள் என்ன சொல்வது- நாம் என்ன கேட்பது என்ற உணர்வு அல்லது அலட்சிய மனப்பான்மையோடு நம்மிடம் நடந்து கொள்வார்கள்.

இவர்களுள் சிலர் மேலும் ஒருபடி உயரே போய், அப்படியா சேதி? உன்னை நான் கவனித்துக் கொள்கிறேன் என்று நமக்கு எதிராகத் திரும்பிக் கொள்வதோடு எதிரிகளாகவும் மாறிவிடுவார்கள்.

இருக்கிற விரோதிகள் போதாதென்று இன்னும் வேறு புதிய எதிரிகளை உருவாக்கிக் கொள்ளத்தான் வேண்டுமா? (அவசியமில்லை).

இவர்களை வளைத்துப்போடும் வழிதான் நாம் வார்த்தைகளில் தேனைக் குழைப்பது.

நான் என்ன புதிதாகச் சொல்லிவிடப் போகிறேன்?

உங்களுக்குத் தெரியாததா?

என்னையா கேட்கிறீர்கள்?

என் மனத்தில் பட்டதைச் சொல்ல எனக்கு அனுமதி உண்டா? என்று சந்தர்ப்பங்களுக்கு ஏற்றபடி ஒரு சம்பிரதாயமான தொடங்கலுடன் உங்கள் கருத்தைச் சொல்ல ஆரம்பித்தீர்களானால் அது வெகுவாக ஏற்படும்.

இல்லாவிட்டால் நீ யார் இதைச் சொல்ல? என்பார்கள்.

உனக்கு என்ன தெரியும்? என்றும் கேட்பார்கள். மனிதர்கள் இருக்கிறார்களே, அவர்கள் விந்தையானவர்கள்.

நம்மைப் பற்றி நாம் உயர்வாகச் சொன்னால் அவர்கள் நம்மை மட்டமாக எடை போடுகிறார்கள். நம்மைத் தாழ்த்திக் கொண்டாலோ மனம் விசாலப்பட்டு நம்மைப் பற்றி உயர்வாக எண்ண ஆரம்பிக்கிறார்கள்.

இந்தத் தலைகீழ் விதியைப் புரிந்து கொள்ளாதவர்கள் வாழ்வில் தடம்புரண்டு போகிறார்கள். எல்லோருக்குமே ஒரு ஏக்கம் அல் லது எதிர்பார்ப்பு உண்டு.

அது மற்றவர்கள் தங்களுக்கு அங்கீகாரமோ அல்லது மதிப்போ தருகிறார்களா? என்று பார்ப்பது. அதைச் செய்யாவிட்டால் காதைப் பஞ்சாலும் இதயத்தை இரும்புக் கதவுகளாலும் மூடிக்கொண்டு விடுகிறார்கள்.

எனவே என்ன சொன்னாலும் எடுபடாமல் போகிறது. மாட்டிடம் பால் கறக்கும் முன் மடியைத் தடவிக் கொடுப்பதைப் போல இப்படிச் சில முன்னேற்பாடுகளையெல்லாம் செய்யத்தான் வேண்டியிருக்கிறது.

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்

## திருந்திட்டேன்!

"நானா நான் அண்டரண்ட பக்ஷி. உங்கள் பாட்டி கதை சொல்லக் கேட்டிருப்பாயே. நான் பௌர்ணமி அன்றுதான் பிறப்பேன்.

அதுவும் யாராவது பார்த்து எடுத்தால்தான் நான் முட்டையிலிருந்து வெளிவருவேன். உன் அதிர்ஷ்டம் நீ என்னைப் பார்த்தாய். அப்பாடா எத்தனை வருடமாக காத்துக் கிடந்தேன் தெரியுமா? என்னை ஒருவரும் கண்டுபிடிக்கவே இல்லை!"

"அதிர்ஷ்டமா? ஐயோ இனிமே நீ அந்த மாதிரி சீட்டி அடிக்காமல் இரேன்!"

மறுநாள் அவர்கள் எழுந்திருக்கும் போது அதுவும் எழுந்தது. அதற்குத்தான் உடலை இஷ்டப்படி குறுக்கிக் கொள்ள முடியுமே. சின்ன பறவையாக பாபுவின் சட்டை பைக்குள் ஒளிந்து கொண்டது. பாபுவும், பவித்ராவும் பள்ளிக்கூடம் சென்றனர்.

அந்த பறவை அவன் பையிலேயே தூங்கிவிட்டது. பாபுவும் பறவையைப் பற்றி மறந்தே விட்டான். 'டிரில்' கிளாஸ் வந்தது. மைதானத்தில் விளையாட ஓடினர். பாபுவின் கண்ணில் ஒரு பூனைக்குட்டி பட்டுவிட்டது. அவ்வளவுதான். உடனே அதன் வாலுக்கும் வந்தது ஆபத்து.

பாபுவின் தோளில் உட்கார்ந்தபடி காதை வெடுக்கென்று கொத்திவிட்டு பலமாக சீட்டி அடித்தது. விடாமல் ரொம்ப ரொம்ப பலமாக சீட்டியடித்தது. சீட்டி சப்தம் கேட்டு ஹெட் மாஸ்டர் வெளியே வந்தார். பாபுவின் காதைப் பிடித்து இழுத்துக் கைக்கு நாலு அடி கொடுத்து விட்டு, அன்று முழுவதும் பெஞ்சு மீது நிற்கும்படி உத்தரவிட்டார்.



"நான் அந்த பூனையின் வாலைப் பிடித்து இழுத்திருக்கக்கூடாது" என்று சிவந்து போன உள்ளங்கையை தடவிக் கொண்டான்.

"பவித்ரா! இந்த பறவையை எப்படியாவது ஒழித்துக் கட்டணுமே இன்னிக்கு ராத்திரி நம்ம தோட்டத்து பாழாங் கிணற்றிலே அதன் காலில் ஒரு கல்லைக்கட்டி போட்டு விடுகிறேன்," என்றான். பவித்ராவும் அது நல்ல யோசனை என்றாள்.

மறுநாள் முழுவதும் அந்த பறவை வரவில்லை. அவர்களுக்கு ஏற்பட்ட சந்தோசம் கொஞ்ச நஞ்சமல்ல நல்ல வேளை ஒழிந்தது! என்றிருந்தனர்.

அன்று மாலை பாபுவும், பவித்ராவும் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது பக்கத்து வீட்டுக் கோழியை ஓடஓட விரட்டினான் பாபு.

திடீரென்று பலமான சீட்டி சத்தம் கேட்டது. மறுநிமிடம் அந்தப் பறவை பாபுவின் தோளில் உட்கார்ந்து கொண்டு ஸ்வரம் போட்டு விகாரமாக சீட்டி அடிக்க ஆரம்பித்தது. பத்து ரயில் எஞ்சின் சேர்ந்து கத்தினால் உண்டாகும் சத்தத்தைப் போல.

பேப்பர் படித்துக்கொண்டிருந்த பாபுவின் அப்பா கையில் பிரம்புடன் வந்தார்.

"தடிப் பயலே! நான் இந்த மாதிரி சீட்டி அடிக்காதேன்னு எத்தனை தடவை சொல்வது? பக்கத்து வீட்டுக்காரர்கள் எல்லாம் புகார் பண்றாங்க. உன்னை உதைத்தால்தான் புத்தி வரும்," என்று பிரம்பை ஓங்கியபடி வந்தார்.

பாபு அலறி ஓடினான். அப்பாவிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காக. அந்தக் கோழியைப் போல தோட்டம் முழுவதும் ஓடினான். கடைசியில் அவன் அப்பா கையில் சிக்கி, நல்ல அடியையும் வாங்கிக் கொண்டான் பாபு.

பிரம்மை பிடித்துப் போய் நின்று கொண்டிருந்த பவித்ராவைப் பார்த்து, "நீ சீட்டி அடித்தால் உனக்கும் இதே கதிதான்," என்று எச்சரித்தார் அப்பா.

பாவம் பவித்ரா, சாதுபோல ஒரு புத்தகத்தை எடுத்து வைத்தபடி புறத்தரையில் உட்கார்ந்து படிக்க ஆரம்பித்தாள். பாபு உள்ளே விசித்து, விசித்து அழுது கொண்டிருந்தான்.

பவித்ராவுக்கு படிப்பு ஓடவில்லை. எதிரில் உள்ள செடியில் ஒரு சிலந்தி தன் கூட்டை பழுது பார்த்துக் கொண்டிருந்தது. பவித்ராவின் கெட்ட குணம் அவளை அந்தக் கூட்டை மறுபடி பிய்க்கும்படிச் செய்தது. பிய்த்தது தான் தாமதம். என்ன நடந்தது தெரியுமா? அதே தான்! அண்டரண்ட பக்ஷியின் அட்டகாசம்தான். நல்ல வேளை அப்பா வெளியே போய் விட்டார். அம்மா வந்தாள். (தொடரும்)

## 10.2016 25 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1147 - முதலாம் அஃபொன்சோ தலைமையில் போர்த்துக்கேயர் லிஸ்பன் நகரைப் பிடித்தனர்.
- 1415 - அஜின்கோர்ட் நகரில் இடம்பெற்ற போரில் இங்கிலாந்தின் ஐந்தாம் ஹென்றியின் படைகள் பிரான்சைத் தோற்கடித்தனர்.
- 1616 - அவுஸ்திரேலியாவில் கால்பதித்த இரண்டாவது ஐரோப்பியர் டச்சு கப்டன் டேர்க் ஹார்ட்டொக். மேற்கு அவுஸ்திரேலியாவில் டேர்க் ஹார்ட்டொக் தீவு அவரது பெயரால் அழைக்கப்படுகிறது.
- 1760 - மூன்றாம் ஜோர்ஜ் பெரிய பிரித்தானியாவின் மன்னனானான்.
- 1900 - ஐக்கிய இராச்சியம் தென்னாபிரிக்காவின் டிரான்ஸ்வால் மாநிலத்தை இணைத்துக் கொண்டது.
- 1917 - ரஷ்யாவில் ஒக்டோபர் புரட்சி (பழைய ஜூலியன் நாட்காட்டியின் படி). இடம்பெற்றது. போல்ஷெவிக்குகள் குளிர்கால அரண்மனையைக் கைப்பற்றினர்.
- 1918 - அலாஸ்காவில் பிரின்சஸ் சோஃபியா என்ற கப்பல் தாண்டதில் 353 பேர் கொல்லப்பட்டனர்.
- 1924 - இந்தியாவில் சுபாஷ் சந்திர போஸ் பிரித்தானியரால் சிறைப்பிடிக்கப்பட்டார்.
- 1935 - எயிட்டியில் சூறாவளி மற்றும் வெள்ளம் காரணமாக 2000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1936 - ஹிட்லர் மற்றும் முசோலினி இணைந்து ரோம்-பேர்லின் அச்சு என்ற கூட்டமை
- 1973 - இஸ்ரேல்-எகிப்து இடையில் நடைபெற்ற யோம் கிப்பூர்ப் போர் முடிவுற்று சீனாய் இடைக்கால உடன்படிக்கைக்கு வழிநடத்தியது.
- 1983 - ஐக்கிய அமெரிக்காவும் அதன் கரீபியன் கூட்டு நாடுகளும் கிரெனாடாவை முற்று கையிட்டு அதனைக் கைப்பற்றின.
- 1991 - யூகொஸ்லாவிய இராணுவம் சிலவேனியாவில் இருந்து முற்றாக வெளியேறியது.
- 1995 - கொழும்பு கொலன்னாவை எண்ணெய்க்குதங்களில் இடம்பெற்ற பெரும் தீயில் 21 படையினர் கொல்லப்பட்டனர்.
- 2000 - பிந்துனுவேவா படுகொலைகள்: இலங்கையில் பண்டாரவளை, பிந்துனுவேவா சிறைகள் மீது சிங்களவர்கள் நடத்திய தாக்குதலில் தமிழ் அரசியல் கைதிகள் 26 பேர் கொல்லப்பட்டனர்.
- 2001 - விண்டோஸ் எக்ஸ்பி வெளியிடப்பட்டது.
- 2001 - இந்தியாவில் தடா சட்டத்துக்கு பதிலாக POTO என்ற புதிய பயங்கரவாத தடுப்பு சட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்தது. இந்த சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகள் உள்ளிட்ட 23 தீவிரவாத அமைப்புகளுக்கு நடுவண் அரசு தடை விதித்தது.
- 2007 - சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் முதலாவது இரட்டை அடுக்கு விமானம் ஏர்பஸ் ஏ380 தனது முதலாவது சேவையை சிட்னிக்கு ஆரம்பித்தது.

பிறப்புக்கள்

- 1811 - எவரிஸ்ட் கால்வா, பிரெஞ்சு கணிதவியலர். (இ. 1832)
- 1881 - பாப்லோ பிக்காசோ, ஸ்பானிய ஓவியர், சிற்பி. (இ. 1973)
- 1973 - றசல் பிரேமகுமாரன் ஆர்னோல்ட், இலங்கை துடுப்பாட்ட வீரர்.

இறப்புகள்

- 1400 - ஜெஃப்றி சோசர், ஆங்கில இலக்கிய மேதை. (பி 1340)
- 2005 - நிர்மல் வர்மா, ஹிந்தி எழுத்தாளர். (பி. 1929)
- 1980 - ஸாஹிர் லுதியானவி, ஹிந்தித் திரைப்படப் பாடலாசிரியர். (பி. 1921)

சிறப்பு நாள்

- கசக்ஸ்தான் - குடியரசு நாள். (1990)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 50 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 95 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 50 | 100 | 80 |
| தக்காளி | 50 | 80 | 40 | 80 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 | 80 | 60 |
| கோவா | 60 | 80 | 60 | 100 | 80 |
| கரட் | 80 | 80 | 60 | 160 | 70 |
| பூசணி | 30 | 80 | 20 | 60 | 30 |
| புடோல் | 50 | 80 | 30 | 80 | 40 |
| வாழைக்காய் | 50 | 60 | 40 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 150 | 100 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 80 | [illegible] | 100 |
| பாகற்காய் | 120 | 200 | 100 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 120 | 200 | 80 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 150 | 70 | 120 | 80 |
| பயற்றங்காய் | 120 | 120 | 80 | 120 | 120 |
| லீக்ஸ் | 140 | 120 | 100 | 160 | 140 |
| பீற்றூட் | 50 | 80 | 50 | 100 | 60 |
| கறிமிளகாய் | 140 | 200 | 90 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 80 | 100 | 30 | 80 | 80 |
| போஞ்சி | 200 | 200 | 150 | 200 | 60 |
| கத்தரிதும்புள்ள | 40 | 20 | 30 | 50 | 50 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 25 | 40 | 20 |
| தேசிக்காய் | 500 | 600 | 500 | 600 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 20-35 | 35-45 | 50 |
| இராசவள்ளி | — | — | — | — | 150 |
| வெங்காயப்பூ | 160 | — | — | 160 | 200 |
| முள்ளங்கி | 60 | — | 30 | 80 | 50 |
| பொன்னாங்காணி | 30 | — | 10 | 40 | 20 |
| வல்லாரை | 10 | — | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | 40 | 50 | — | 100 | — |

# தென்கிழக்கு பல்கலையிலும் நேற்றுப் பாரிய போராட்டம்







(கொழும்பு)
யாழ். பல்கலைக்கழ மாணவர்கள் கொல்லப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்திலும் நேற்று நண்பகல் பாரிய போராட்டம் நடத்தப்பட்டது. (இ-7)



## சீனாவிற்கு மற்றொரு மாவோ தேவை

(பீஜிங்)

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் நான்கு நாள் உயர்மட்ட தலைவர்கள் கூட்டம் இன்று தொடங்குகிறது. இதில் சீன கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட முக்கிய தலைவர்கள் கலந்து கொள்கின்றனர்.

இந்த நான்கு நாள் கூட்டத்தில் சீனாவின் கொள்கை குறித்து பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், இந்த மாநாட்டின் போது ஜனாதிபதி ஜி ஜின்பிங் தலைமையிலான ஆட்சி குறித்து அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு விவாதிக்கப்படும்.

ஜி ஜின்பிங்கின் ஆட்சியை மேலும் 5 ஆண்டுகள் நீட்டிப்பது தொடர்பான மசோதாவும் தாக்கல் செய்யப்பட உள்ளது.

இதனால் சீன அரசியல் சூழல் தற்போது மிகவும் பரபரப்பாக காணப்படுகிறது.

இந்நிலையில் சீன கம்யூனிஸ்ட் அதிகார பூர்வ பத்திரிகையில், சீனாவிற்கு மற்றொரு மாவோ தேவை என்று வலியுறுத்தி செய்தி வெளியிட்டுள்ளது.


இந்த மாநாட்டில் சீன மக்கள் குடியரசின் ஜனாதிபதி ஜி ஜின்பிங் மற்றும் பிரதமர் லி கிகுவாங் கலந்து கொள்ளமாட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மனிதக் கேடயமாகப் பயன்படுத்திய 284 பேரை கொன்று குவித்த ஐ.எஸ்

( மொசூல் )

ஈராக்கின், மொசூல் நகரில் கடும் பின்னடைவை சந்தித்துள்ள ஐ.எஸ். தீவிரவாதிகள், மனித கேடயங்களாக பயன்படுத்திய 284 பேரை நேற்று முன்தினம் கொன்று குவித்துள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

சுட்டுக் கொல்லப்பட்ட இவ்அனைவரின் உடல்கள் மொசூல் வடக்கு பகுதியில் உள்ள விவசாய கல்லூரி வளாகத்தில் ஒரே இடத்தில் மொத்தமாக புதைக்கப்பட்டதாகவும், கொல்லப்பட்டவர்களில் சிறுவர்களும் அடங்குவதாகவும் உளவுத்துறை தெரிவித்துள்ளது.




ஈராக்கில், மொசூல் நகரை மீட்பதில் ஈராக் மற்றும் குர்திஷ் இராணுவத்தின் கூட்டுப்படை தீவிரம் காட்டி வருகின்றது.

ஆனால், இத்தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல், பின்வாங்கும் ஐ.எஸ். தீவிரவாதிகள், தாக்குதலில் இருந்து தப்பிக்க மொசூலை சுற்றியுள்ள கிராமங்களில் வாழும் மக்களை மனித கேடயங்களாக பயன்படுத்தி வருகின்றனர்.

அண்மைய தகவலின் படி, அவர்கள் அப்பகுதியில் உள்ள 520 குடும்பங்களை மனித கேடயங்களாக சிறை பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஆந்திரா - ஒடிசா எல்லைப் பகுதியில் 18மாவோயிஸ்டுகள் சுட்டுக்கொலை



ஆந்திரா - ஒடிசா எல்லைப் பகுதியில் 18 மாவோயிஸ்டுகள் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர். வனப்பகுதியில் பதுங்கி இருந்த மாவோயிஸ்டுகளை நேற்றுக் காலை பொலிஸார் சுட்டுக் கொன்றனர்.

மாவோயிஸ்டுகள் உடனான துப்பாக்கிச் சண்டையில் காவலர்கள் இரண்டு பேர் படுகாயமடைந்துள்ளனர். (இ-7)

## மது விற்பனைக்குத் தடை விதித்து பாராளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றம்

(பக்தாத்)

ஈராக்கில் மது விற்பனைக்கு தடை விதித்து பாராளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஈராக் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் நாடு. இங்கு ஷியா பிரிவை சேர்ந்தவர்கள் அதிகளவில் உள்ளனர்.

எனவே பாராளுமன்றத்தில் அப்பிரிவைச் சேர்ந்த வர்களே அதிக அளவில் உள்ளனர்.

இந்த நிலையில் அங்கு மது விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் தயாரிக்கவும், இறக்குமதி செய்யவும் இத்தடை பொருந்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கான சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு அரசு இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

அதில் இத்தடையை மீறுபவர்களுக்கு (25 மில்லியன் ஈராக் டினார் (ரூ.15 இலட்சம்) அபராதம் விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இதற்கு எத்தனை எம்.பிக்கள் ஆதரவு தெரிவித்தார்கள் என்ற தகவல் வெளியிடப்படவில்லை.

பொதுவாக ஈராக்கில் பெரிய நகரங்களில் கிறிஸ்தவர்களால் மதுபானக் கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன.


தற்போது ஷியா பிரிவினரின் புனித முகரம் மாதம் என்பதால் அவை மூடப்பட்டுள்ளன. இந்த விடுமுறை முடிந்த பிறகு தான் மதுபான கடைகள் தடை விவகாரம் குறித்து முழுமையாக தெரிய வரும். (இ-7)

# ஐப்பசி மாத இராசிபலன்கள்

## 17.10.2016-15.11.2016

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேரும் நேரம்!



*சதாசர்வ காலமும் தங்கள் முன்னேற்றத்தைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கும் துலா ராசி நேயர்களே!*

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் சுக்ரன் தனஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். அவரோடு சுக பஞ்சமாதிபதியான சனியும் இணைந்து இருக்கின்றார். எனவே 'கவலை' என்ற மூன்றெழுத்து உங்களை விட்டு விலகப் போகின்றது. 'மகிழ்ச்சி' என்ற நான்கெழுத்து உங்களோடு வந்து ஒட்டிக்கொள்ளப் போகின்றது. திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறும்.

திடீர் தனலாபம் வந்து சேரும். வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயற்படும் உங்களுக்கு வீடு வாங்க, விற்க உகந்த நேரமாகவும், வெளிநாட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் நேரமாகவும் இந்த மாதம் அமையப் போகின்றது. சூரியன் உங்கள் ராசியிலேயே நீச்சம் பெற்றிருக்கின்றார். லாபாதிபதி நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல என்றாலும், தனாதிபதி சகாயஸ்தானத்தில் இருப்பதால் ஏதாவது ஒரு வழியில் உங்களுக்குப் பணம் வந்து கொண்டே இருக்கும். திட்டமிட்ட காரியங்களைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள்.

தெரியாத புதுமுகங்களை நம்பி காரியங்களை ஒப்படைக்க வேண்டாம். ஏன் என்றால் ஏழரைச் சனியின் ஆதிக்கம் இன்னும் இருக்கின்றது. இதில் ஒரு சிலருக்கு ஏமாற்றங்களையும் சந்திக்க நேரிடும். விரய ஸ்தானத்தில் வியாழனும், புதனும் கூடியிருப்பதால், மாதத் தொடக்க நாளிலேயே விரயங்கள் அதிகரிக்கும்.

3, 6இற்கு அதிபதியான குரு 12இல் சஞ்சரிப்பதால் உத்தியோகத்தில் திடீர் திருப்பங்களும், மாற்றங்களும் உருவாகலாம். உயர் அதிகாரிகள் உங்களுக்கு அனுகூலமாக நடந்து கொள்வர். ஊதிய உயர்வும் எதிர்பார்த்தபடியே கிடைக்கும். வேலைப்பளு கூடுகிறதே என்று கவலைப்பட்டவர்களுக்கு இலாகா மாற்றங்கள் இனிய மாற்றங்களாக அமையும். ஒவ்வொரு சனிக்கிழமையும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. அதுமட்டுமல்லாமல் உங்கள் ஜாதகப்படி சனி எத்தனையாவது சுற்று என்பதைக் கண்டறிந்து அதற்கேற்ப வழிபாடுகளையும் மேற்கொள்ளுங்கள். வரும் தீபாவளித் திருநாளில் உங்கள் ராசிக்கு ஏற்ற யோக வண்ணத்தில் ஆடைகளை அணிந்து ஆலய தரிசனம் செய்யுங்கள். வண்ணங்கள் மூலம் உங்கள் எண்ணங்கள் பூர்த்தியாகலாம்.

**துலாம் புதனும், விருச்சிக புதனும்!**

மாதத் தொடக்க நாளிலேயே துலாம் ராசிக்குப் புதன் வருகின்றார். விரயாதிபதி வீடு தேடி வரும்பொழுது விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது. அரைகுறையாக நின்ற வீட்டுப்பணிகளைத் தொடரலாம். அத்தியாவசியப் பொருட்களை வாங்கலாம். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். விருச்சிக புதனின் சஞ்சாரத்தின் பொழுது வீடு மாற்றம் தொடர்பான முயற்சிகளை வெற்றிதரும். விவசாயம் முதல் கால்நடை வளர்ப்பு வரை ஆர்வம் காட்டுவீர்கள். உறவினர்களின் பகை மாறும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர்.

**உச்ச செவ்வாயின் சஞ்சாரம்!**

ஒக்டோபர் 25ஆம் திகதி மகர ராசியில் செவ்வாய் உச்சம் பெறுகின்றார். 2, 7இற்கு அதிபதி உச்சம்பெறும் பொழுது நினைத்த காரியங்கள் எளிதில் நிறைவேறும். வாழ்க்கைத்துணை வழியே வரவு ஏற்படும். அவர்களுக்காக உத்தியோக முயற்சியில் ஈடுபட்டிருந்தால் அதில் அனுகூலம் கிடைத்து உதிரிவருமானம் வந்து சேரும். பழைய சொத்துக்களையும், நகைகளையும் கொடுத்து விட்டுப் புதிய சொத்துக்கள் வாங்கவும், ஆபரணங்களை வாங்கவும் வழியமைத்துக் கொள்வீர்கள்.




**தனுசு சுக்ரனின் சஞ்சாரம்!**

நவம்பர் 8ஆம் திகதி தனுசு ராசிக்கு சுக்ரன் செல்கின்றார். ராசிநாதன் 3இல் சஞ்சரிக்கும் பொழுது வழக்குகள் சாதகமாகும். வருமானம் திருப்தி தரும். இழப்புகளை ஈடு செய்ய ஏதேனும் ஒரு வழிபிறக்கும். சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது நடைபெறும். செலவுகளில் சிக்கனம் காட்டுவீர்கள். பயணங்கள் பலன் தருவதாக அமையும். பக்கத்து வீட்டாரின் பகை மாறும். தங்கம், வெள்ளி, ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டு. நீண்ட நாள் பாக்கிகள் வசூலாகும். இம்மாதம் சிவன் வழிபாடும், அம்பிகை வழிபாடும் இன்பங்களை வழங்கும். வீட்டில் பட்டாபிஷேக ராமர் படத்தை வைத்து வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும் மாதமாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். கூடுதல் முன்னேற்றம் கிடைக்கும். கடுமையாக முயற்சித்தும் நடைபெறாத காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும். காரிய வெற்றிக்கு அருகிலிருப்பவர்களின் ஆதரவு கிடைக்கும். கணவன், மனைவிக்குள் இருந்த பிணக்குகள் மாறி இணக்கம் ஏற்படும். குழந்தைகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். அவர்களின் எதிர்கால நலன் கருதி ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். பொதுநலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். தாய்வழி தனலாபம் உண்டு. உடன்பிறப்புகளின் பகை மாறும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைத்து சந்தோசம் காண்பர். ஆதியந்தப்பிரபு வழிபாடு ஆனந்தம் வழங்கும். யோகம் தரும் நிறத்தில் தீபாவளிக்கு உரிய ஆடைகளை எடுத்து அணிந்து கொள்வது நல்லது.

பணத்தேவையைப் பூர்த்தி செய்யும் நாட்கள்:
ஒக்டோபர்: 20, 21, 25, 26
நவம்பர்: 2, 3, 7, 8

## சேமிப்பு உயரும் நேரம்!



*உடல் வலிமையைக் காட்டிலும் உள்ள வலிமையை அதிகம் பெற்றிருக்கும் விருச்சிக ராசி நேயர்களே!*

ஐப்பசி மாதக் கிரக நிலைகளைப் பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் செவ்வாய் தனஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். பண வரவு திருப்திகரமாக இருக்கும். அதுமட்டுமல்ல தனாதிபதி குரு லாபஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் சேமிப்பு உயரும். செல்வாக்கு மேலோங்கும். பூமி யோகம் முதல் அரசியல் யோகம் வரை பொன்னான யோகங்கள் வாழ்க்கையில் வந்து சேரும். நூதனப் பொருட்கள் வாங்குவதிலும், வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதிலும் அதிக கவனம் செலுத்துவீர்கள்.

மாதத்தொடக்கத்திலேயே சுக்ரன் சனியோடு உங்கள் ராசியில் இணைந்திருப்பதால் பெண்களால் பெருமை சேரும். ஆபரணங்கள், ஆடைகள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். கல்யாணப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். வரன்கள் வருவதைப் பரிசீலனை செய்து நல்ல வரனைத் தேர்ந்தெடுத்து திருமணத் திகதி குறிக்கும் அளவிற்கு கிரக நிலைகள் சாதகமாக விளங்குகின்றன.

குரு பார்வை 5ஆம் இடத்தில் பதிகின்றது. குருவிற்குரிய வீடான மீன ராசியிலேயே குரு பார்வை பதிவதால் பூர்வீக சொத்துகள் மூலம் லாபம் கிடைக்கும். புனிதப் பயணங்களை மேற்கொள்வீர்கள். கார்மேகம் பொழிவது போல தொழிலில் லாபம் வந்து கொண்டேயிருக்கும். பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் அனுகூலம் கிடைக்கும். கைவைத்த காரியங்கள் எல்லாம் வெற்றிகரமாக முடியும்.

பொய் பேசும் நண்பர்கள் விலகுவர். புதிய நண்பர்களும், அதிகாரப் பதவியில் உள்ளவர்களும் நண்பர்களாகி நல்ல காரியங்களை முன்னின்று நடத்த வழிகாட்டுவர். 4இல் கேது இருப்பதால் வாகனங்களை மாற்றம் செய்ய வேண்டுமென்ற எண்ணம் ஒரு சில மாதங்களாகவே உங்கள் மனதில் பதிந்திருக்கும். அந்த எண்ணங்கள் நிறைவேறுவதற்கான அறிகுறிகள் இந்த மாதத்தில் தென்படுகின்றன. நிலம் வீடு, வாகனங்கள் வாங்கும் யோகமும், புகழ்கூடி பொதுவாழ்வில் பொறுப்புகளை ஏற்கும் யோகமும் உண்டு.

உடல் ஆரோக்கியத்தில் சிறு சிறு தொல்லைகள் ஏற்பட்டு அகலும். அலைச்சலின் காரணமாகவும், ஆகாரக் கட்டுப்பாடின்மை காரணமாகவும் இது உருவாகலாம். அவற்றைக் கண்காணித்துக் கொள்வது நல்லது. வாரந்தோறும் சனிக்கிழமை விநாயகர் வழிபாட்டை மேற்கொள்வதோடு, தீபாளியன்று கிருஷ்ணரை வழிபாடு செய்யுங்கள். உங்களுக்குரிய யோக வண்ணத்தில் ஆடைகளை அணிந்து கொண்டு செயற்பட்டால் யோக வாய்ப்புகள் வந்து சேரும்.

**துலாம் புதனும், விருச்சிக புதனும்!**

மாதத்தொடக்கத்தில் உச்சம் பெற்ற புதன் 12ஆம் இடத்திற்கு வருகின்றார். அஷ்டமாதிபதி 12இல் சஞ்சரிக்கும் பொழுது பணப்புழக்கம் அதிகரிக்கும். பயணங்களில் பலன் கிடைக்கும். மன மகிழ்ச்சிக்கு வித்திடும் விதத்தில் பல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். உயர் அதிகாரிகளின் ஒத்துழைப்போடு பணிபுரியும் இடத்தில் மாற்றங்களும், ஏற்றங்களும் வந்து சேரும். விருச்சிகத்தில் புதன் சஞ்சரிக்கும் பொழுது மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும். தொழிலில் புதிய கூட்டாளிகள் வந்திணைவர். வங்கிச் சலுகைகளும், அரசு வழிச்சலுகைகளும் வந்து சேரும்.




**மகரத்தில் உச்சம் பெறும் செவ்வாய்!**

ஒக்டோபர் 25ஆம் திகதி மகர ராசியில் உச்சம் பெறப்போகின்றார். ராசிநாதன் உச்சம் பெறும்பொழுது யோசிக்காது செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். யோக வாய்ப்புகள் அடிக்கடி வந்து சேரும். நேசமனப்பான்மை கொண்டவர்கள் நெருங்கி வந்து உதவி செய்வர். வாசுமனை தூவி வடிவேலனை வழிபாடு செய்தால் வளர்ச்சி மேலும் கூடும். இக்காலம் ஒரு பொற்காலமாகும்.

**தனுசு சுக்ரனின் சஞ்சாரம்!**

நவம்பர் 8ஆம் திகதி தனுசு ராசிக்கு சுக்ரன் செல்கின்றார். இதன் விளைவாக குடும்பச் செலவுகள் கூடும். உடன் இருப்பவர்களின் எண்ணங்களைப் பூர்த்தி செய்ய ஏதேனும் ஒரு விலை உயர்ந்த பொருட்களை வாங்கிக் கொடுக்க நேரிடும். கொடுத்த வாக்கைக் கடைசி நேரத்தில் காப்பாற்றுவீர்கள். குடியிருக்கும் வீட்டை விலைக்கு வாங்கும் யோகம் ஒரு சிலருக்கு உண்டு. இம்மாதம் வெள்ளிக்கிழமை தோறும் விநாயகர் வழிபாட்டையும், சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**


இம்மாதம் இல்லத்தில் நல்ல காரியங்கள் நடைபெறும். வீடு மாற்றங்கள் விருப்பப்படி நிறைவேறும். கணவன், மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். உங்கள் பெயரிலேயே கட்டடங்கள் வாங்குவது நல்லது. திட்டமிட்ட காரியங்களைத் திறம்படச் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள். பிள்ளைகளுக்கான வேலைவாய்ப்புக் கிடைக்கும். அதன் மூலம் ஒரு தொகையை உங்கள் கரங்களில் கொண்டு வந்து சேர்ப்பர். பிடிவாத குணத்தை மட்டும் கொஞ்சம் தளர்த்திக் கொள்வது நல்லது. பைரவர் வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும். தீபாவளியன்று தெய்வ தரிசனம் செய்யும் பொழுது உங்களுக்குரிய யோக வண்ணத்தில் ஆடைகளை அணிந்து கொள்வது நல்லது. உடன்பிறப்புகளாலும், பெற்றோர்களாலும் உதவிகள் கிடைத்து மகிழ்வீர்கள்.

பணத் தேவையைப் பூர்த்தி செய்யும் நாட்கள்:
ஒக்டோபர்: 22, 23, 24, 27, 28
நவம்பர்: 4, 5, 7, 8, 9

(தொடரும்)

# மாணவர் சமூகத்தின் பாதுகாப்புக்கு பங்கம் விளைவிக்கும் செயற்பாடு

## யாழ்.பல்கலை.சட்ட மாணவர் சங்கம் கண்டனம்



(யாழ்ப்பாணம்)

**பல்கலைக்கழக மாணவர்களின் படுகொலைச் சம்பவமானது மாணவர் சமூகத்தின் பாதுகாப்புக்கும் சமூக நீதியின் இருப்புக்கும் பங்கம் விளைவிக்கும் செயற்பாடு என யாழ்.பல்கலைக்கழக சட்ட மாணவர் சங்கம் தெரிவித்துள்ளது.**

யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர்கள் இருவர் துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்டமைக்கு நீதிகோரி யாழ். பல்கலைக்கழக சட்ட மாணவர் சங்கம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

கடந்த 20.10.2016 வியாழக்கிழமை இரவுவேளை மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டமை மாணவர் சமூகத்தின் பாதுகாப்புக்கும் சமூகநீதியின் இருப்புக்கும் பங்கம் விளைவிக்கும் ஒரு செயற்பாடாகவே கருதவேண்டியுள்ளது.

சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாக்கும் பொறுப்பு பொலிஸாரிடமும் கையளிக்கப்பட்டிருக்கின்ற பொழுதும், அவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள இவ்வாறான தன்னிச்சையான செயற்பாடானது சட்டத்திற்கு முரணானதும், மக்கள் சட்டத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கையை வலுவிழக்க செய்வதாகவும் அமைந்துள்ளது.

குறித்த சந்தர்ப்பத்தில் நேரடித்துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமையானது எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாததும் தேவையற்றதுமாகும். குறித்த உயிரிழப்பினை ஏன் விபத்தாக மூடி மறைக்க முனைந்தார்கள் என்பதும், சாட்சியங்களை அழிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதா என்பதும் ஓர் கேள்வியாகவே இருக்கின்றது. மேலும் இச்செயற்பாடுகள் "இதுகொலையா" என்ற நிலைப்பாட்டை மக்கள் மத்தியில் தோற்றுவித்துள்ளது.

இலங்கை அரசியலமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படையுரிமையின் கீழ் எந்தவொரு நிலையிலும் சட்டத்திற்கு உட்படாமல் ஒருவரது உயிரை பறிக்க முடியாது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த சம்பவத்தில் இரண்டு மாணவர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகின்றது. இந்த நிகழ்வானது மக்கள் தம் உரிமை மற்றும் பாதுகாப்பின் மேல் வைத்துள்ள நம்பிக்கையில் கேள்வியை ஏற்படுத்துவதாகவே அமைந்துள்ளது. எனவே இந்த உரிமை மீறல்கள் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழு ஏனைய மனித உரிமை அமைப்புக்கள் இது தொடர்பான அழுத்தங்களை உரிய தரப்பினருக்கு வழங்க வேண்டும்.

எனவே குறித்த இரு உயிரிழப்புகளுக்கும் குறிப்பிட்ட சம்பவத்துடன் தொடர்புபட்ட பொலிஸாரே முழுப்பொறுப்பும் என்பதோடு இதற்கு நீதித்துறையின் நேரடியான கண்காணிப்பின் கீழ் நீதியான விசாரணை மூலம் நியாயமான ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு கிடைக்க வேண்டும் என்பதனை பொறுப்பிலுள்ள அனைத்து தரப்பினரிடமும் யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்ட மாணவர் சங்கம் கேட்டுக்கொள்கிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கண்டன அறிக்கையின் பிரதிகள் யாழ்.மாவட்ட அரச அதிபரின் ஊடாக ஜனாதிபதி மற்றும் பிரத மருக்கு நேற்றைய தினம் அனுப்பி வைத்துள்ளனர். (இ-9)


# மரண அறிவித்தல்

## அமரர் முருகுப்பிள்ளை இராமசாமி



(சி/6261)

தாளையடி மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் மயிலி யந்தனை தொண்டைமானாறை வசிப்பிடமாகவும் கொண்ட முருகுப்பிள்ளை இராமசாமி கடந்த சனிக்கிழமை (22.10.2016) இறைபதம் அடைந்து விட்டார். அன்னார் இராமசாமி கண்மணியின் அன்புக் கணவரும் பரமானந்தகுலசிங்கம் (இந்தியா), காலஞ்சென்ற திசவீரசிங்கம், காலஞ்சென்ற கெனடிசிங்கம், ஜெயலலிதா (லண்டன்) , அண்ணாத்துரை (இலங்கை), கருணாநிதி (லண்டன்), தேவிகா (ஜேர்மன்), அன்பழகன் (நோர்வே), இந்திரா (நெதர்லாந்து), அறிவழகன் (லண்டன்), காண்டீபன் (பிரான்ஸ்), சந்திரா (miss) ஆகியோரின் அன்புத் தந்தையும் மேரிசூன் சகாயராணி (இந்தியா), நேசக்கிளி, மகேந்திரலிங்கம் (லண்டன்) கமலினி (இலங்கை) , அனுசூயா (லண்டன்), சந்திரகுமார் (ஜேர்மன்), சத்தியாஈஸ்வரி (நோர்வே), திருச்செல்வம் (நெதர்லந்து), கஸ்தூரி(லண்டன்), மேரிவதனா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை புதன்கிழமை (26.10.2016) காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மயிலியந் தனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மயிலியந்தனை, தொண்டைமானாறு.

தகவல்:-
குடும்பத்தினர்.

# யாழ்.மாவட்ட செயலகம் முன் பல்கலை.மாணவர்கள் திரள்வு











**யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டதை கண்டித்தும் நீதியான விசாரணை கோரியும் நேற்றையதினம் யாழ். மாவட்ட செயலகம் முன்பாக அமைதி வழியிலான போராட்டம் ஒன்று மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது ஏ-9 வீதி ஒரு மணித்தியாலம் வழி மறிக்கப்பட்டதோடு 3 மணிநேரம் முடங்கியிருந்தது.**

***(படங்கள் - உ.சாளின்)***












வலது கன்னத்தில் அடித்தால்
இடது கன்னத்தையும் திருப்பிக் காட்டு.
– யேசு பிரான்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அகிம்சை போராட்டங்களுக்கு அதிகூடிய மதிப்பளியுங்கள்

இந்திய தேசத்தின் விடுதலை என்பது மகாத்மா காந்தி மேற்கொண்ட சாத்வீகப் போராட்டத்தினால் சாத்தியமானது.

மகாத்மா காந்தி மேற்கொண்ட உண்ணாவிரதப் போராட்டமே பாரத பூமிக்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தது எனும் போது அதன் மறு முனை,

மகாத்மா காந்தியின் அகிம்சைப் போராட்டத்திற்கு ஆங்கிலேயர் கொடுத்த அதி உன்னத மரியாதை காரணமாகவே, விடுதலை சாத்தியமாயிற்று எனலாம்.

ஆக, அகிம்சைப் போராட்டம் என்பது சாத்வீகமானது. யாருக்கும் தீங்கில்லாதது.

வன்முறைகள் இன்றி–அதர்மம் இன்றி தர்மத்தின் வழியில் நீதியின் பெயரால் மக்கள் தங்கள் அவலத்தை–குறையை–தீராப் பிரச்சினையை எடுத்தியம்புவதற்காக மேற்கொள்வது.

எனவே, அகிம்சைப் போராட்டம் நடக்கும் போது அதற்கு அதி உன்னதமான மதிப்பும் மரியாதையும் கொடுக்க வேண்டும். அப்போதுதான் நாட்டில் நீதி தழைக்கும். அறம் ஓங்கும். மாரி பொழியும்.

இதைவிடுத்து அகிம்சைப் போராட்டங்களை ஒரு சாதாரண விடயமாக–பெறுமதியில்லாத ஒன்றாகப் பார்ப்பதென்பது மிகப்பெரும் அபத்தமாகும்.

அகிம்சைப் போராட்டங்கள் எங்களை எதுவும் செய்யாது என்று சம்பந்தப்பட்ட தரப்புகள் எண்ணுமாயின் அதுவே மிகப்பெரிய அழிவுகளை ஏற்படுத்துவதற்கு அடித்தளமாக அமையும். ஆகவே அகிம்சைப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் போது அது கண்டு சம்பந்தப்பட்ட தரப்புகள் கவலை கொள்ள வேண்டும். இது எங்கள் ஆட்சிக்கும் நிர்வாகத்திற்கும் இழுக்கு என்று உணரவேண்டும்.

எனவே இத்தகைய போராட்டங்கள் நடைபெறாமல் இருக்கும் வகையில் சட்டம், நீதி, ஒழுங்கு பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உறுதிப் பாட்டை எடுத்துக் கொள்வதுடன்,

இந்த நாட்டில் இன்றைய தினம் வட மாகாணம் முழுமையிலும் நடக்கின்ற பூரண கடையடைப்பு என்பது–இரண்டு பல்கலைக்கழக மாணவர்களை பொலிஸார் சுட்டுக் கொன்றதால் ஏற்பட்ட மனக்குமுறலின் வெளிப்பாடாகும்.

அதிலும் வன்னிப்பெரும் நிலப்பரப்பில் நடந்த கொடூர யுத்தத்தால் தமிழினத்தை சங்காரம் செய்து தமிழினம் மீள முடியாது என்று ஆக்கிய பேரினவாத ஆட்சி கலைந்து நல்லாட்சி அமைந்தது என்று மக்கள் நம்பியிருக்கையில், அந்த ஆட்சியில் நடந்த ஒரு நெட்டூரத்தை வெளிப்படுத்துவதாகவே இன்றைய அகிம்சைப் போராட்டம் அமைகிறது.

ஆக, இப்போராட்டத்திற்கு ஆட்சியாளர்களும் படைத்தரப்பும் அதிஉச்ச மரியாதை செலுத்த வேண்டும். இதுபோன்ற துயரச் சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

இவை யாவற்றுக்கும் மேலாக இத்தகைய சம்பவங்கள் ஏற்படுவதற்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டுமாயின் அதற்கான ஒரே வழி இனப்பிரச்சினைக்கான தீர்வுகளை முன்வைப்பதாகும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு முன்வைக்கப்பட்டு வடக்குக் கிழக்கு இணைந்த சமஷ்டி ஆட்சியில் பொலிஸ்–காணி அதிகாரங்கள் தமிழ் மக்களுக்கு கிடைக்கும் போது நிலைமை ஒரு பெரும்மாற்றத்துக்கு உட்படும்.

சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்படும். இனவாதம் அடியோடு அற்றுப்போகும். ஆகையால் இந்த நாட்டில் நடந்த அத்தனை இனத்துவ அழிவுகளுக்கும் காரணமாக இருக்கும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது மிகவும் முக்கியமானதாகும்.

இதுவிடயத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தலைமையிலான அரசு மகத்தான வெற்றியை எட்ட வேண்டும். இது சாத்தியமாக இருந்தால் இனத்துவ பழி தீர்த்தல்களும் இனத்தின் பெயரால் நீதி மறைக்கப்படுவதான சதித்திட்டங்களும் இல்லாமல் போகும்.

ஆனால் இன்று நடைபெறும் அகிம்சைப் போராட்டத்திற்கு உரிய மதிப்புக்கொடுத்து பிரச்சினையற்ற சூழ்நிலையை உருவாக்குவதே சாலப்பொருத்துடையதாகும்.

# பல்கலை.மாணவர்களின் மரணம் மன்னிக்கவே முடியாத குற்றமாகும்

## வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் கண்டனம்

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் மரணம் சட்ட முரணான மன்னிக்கப்பட முடியாத குற்றமாகும்.

அவர்களின் மரணத்தை கண்டித்தும், நீதி கோரியும் இன்று முன்னெடுக்கப்படும் ஹர்த்தாலை பலமுள்ளதாகவும், அர்த்தமுள்ளதாகவும், வலுப்பெறச்செய்ய அனைவரும் ஒன்றுசேர்ந்து முன்னெடுப்போம் என வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

நாம் எத்தனை ஆர்ப்பாட்டம், கடையடைப்பு, எதிர்ப்புகள் மற்றும் ஜனநாயக போராட்டங்களை நடத்தினாலும் இறந்த மாணவர்களின் உயிர் திரும்பி வரப்போவதில்லை. ஒரு பிள்ளையை பெற்று, வளர்த்து ஆளாக்கி இந்த வயதில் பறிகொடுக்கும் போது, அவர்களின் பெற்றோருக்கும் உறவினர்களுக்கும் உண்மையான நண்பர்களுக்கும் தான் அதன் வேதனை, வலி தெரியும். ஆகவே இவ்வாறான காட்டுமிராண்டித்தனமான செயல்கள் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியது.

மேலும் எதிர்காலத்தில் எமது மாணவர்களும், பொது மக்களும் இவ்வாறான காட்டுமிராண்டித்தனமான சட்ட முரணான செயல்கள் நடைபெறாது இருக்க வேண்டுமாயின் இவ்வாறான ஜனநாயக ரீதியான போராட்டங்கள் தேவையாகவுள்ளது.

ஆகவே இன்று நடைபெறவுள்ள மாகாணம் தழுவிய ஹர்த்தாலுக்கு எல்லோரும் தத்தமது பங்களிப்பை வழங்க வேண்டும். குறிப்பாக கடந்த காலத்தில் தனியார் போக்குவரத்து துறையினர், வர்த்தக சங்கங்கள் மற்றும் கிராமமட்ட அமைப்பினர் பாரிய பங்களிப்பைச் செய்திருக்கின்றனர்.

கடையடைப்புக்கு அழைப்பு விடுத்த கட்சியினர் சம்பந்தப்பட்ட அமைப்பினரோடு தொடர்புகொள்ளவில்லையென தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

சிறு சிறு தவறுகளைப் பொருட்படுத்தாது நடைபெறவிருக்கும் ஹர்த்தாலை பலமுள்ளதாகவும், அர்த்தமுள்ளதாகவும், வலுப்பெறச் செய்ய அனைவரும் ஒன்று சேர்ந்து முன்னெடுப்போம் என அவர் மேலும் அழைப்பு விடுத்துள்ளார். (இ-9)

## மாணவர்கள் மரணத்தால் சர்வதேசமே அதிர்வு

### மகளிர் அபிவிருத்தி நிலையம் அனுதாபம்

யாழ்.பல்கலைக்கழகமாணவர்கள் இருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காசி அகாலமரணம் அடைந்த சம்பவத்தினால் யாழ்.மக்கள் மட்டுமல்ல இன்று சர்வதேசமே அதிர்ந்து போய் உள்ளது. அப் பல்கலைக்கழக மாணவர்கள் மீது காட்டப்பட்ட அராஜகமான செயற்பாடு இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துவரும் நல்லிணக்க செயற்பாடுகளை கேள்விக் குறியாக்கியுள்ளது.

குண்டுச் சத்தங்களில் இருந்து மீண்டெழுந்த யாழ்.மக்கள் மத்தியில் இச் சம்பவத் தால் ஏற்பட்ட அதிர்வு மீண்டும் பதிவாகியுள்ளது துர்ப்பாக்கியமானதே. நாம் அடியெடுத்துவைக்கும் ஒவ்வோர் கணமும் மீண்டெழுவதற்கான தருணங்களே!

நாம் எழுகின்ற தருணங்கள் வீழ்ந்து விடுவதற்காக அல்ல. இம்மாணவர்களை இழந்து நிற்கும் அவர்கள் குடும்பத்தில் கனத்த இதயத்தோடு சோகத்தை சுமந்து நிற்கும் அவர்களுடைய தாய் மார்களின் கண்ணீரையும் சோகத்தையும் எமது செய்திகளோ அனுதாபங்களோ துடைத்துவிட முடியாது. அவர்களுக்கு இவ்விழப்பை தாங்கிக்கொள்ளும் மனவலிமையும் உறுதியையும் இறைவன் கொடுக்க வேண்டும் என்று மகளிர் அமைப்புக்களின் சார்பில் வேண்டுவதோடு உயிர் பிரிந்த இம்மாணவச்செல்வங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம் என மகளிர் அபிவிருத்தி நிலையத்தலைவி திருமதி சரோஜா சிவச்சந்திரன் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (இ

## மாணவர் பாராளுமன்றத் தேர்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர் பாராளுமன்றத் தேர்தல் நாளை 26 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை நடைபெறும்.

அன்றையதினமே வாக்குகள் எண்ணப்பட்டு வெற்றி பெற்ற மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்களது பெயர்கள் பிற்பகல் 1.30 மணிக்கு அறிவிக்கப்படும்.

அன்றையதினம் அனைத்து மாணவர்களும் தவறாது வருகைதந்து தமது வாக்குகளை அளித்து ஜனநாயகத்தை உறுதிப்படுத்துமாறு வேண்டிக்கொள்கின்றேன் என பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (இ

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் கிழமை காலை 8.30 மணியிலிருந்து 6 மணி வரை யாழ்.பிரதேசத்தில் மாலுசந்தி, வதிரிச்சந்தி, இரும்பு மதவடி, சக்களாவத்தை, இலகடி, அச்செழு ஆகிய இடங்களிலும் கிளிநொச்சிப் பிரதேசத்தில் பூதன் வயல், முறிப்பு, குழுழ முனை, தண்ணிமுறிப்பு, குமுழமுனை அரிசி ஆலை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில மடுக்கந்த பிரதேசம், ஓமந்தை வீட்டுத்தோட்டம், ஓமந்தை உருக்குத் தொழிற்சாலை ஆகிய பிரதேசங்களில் மின் தடைப்படும்.(இ-9)

## மாணவர் படுகொலையை கண்டித்து ஏற்பாடு செய்யப்பட்ட ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவு

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் கடந்த வியாழக்கிழமை இரவு பொலிஸாரால் சுடப்பட்டு படுகொலை செய்யப பட்டதைக் கண்டித்து அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளின ஏற்பாட்டில் இன்று பூரண ஹர்த்தாலிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அழைப்பினை ஏற்று முற்போக்கு தமிழ் தேசிய கட்சியனராகிய நாமும் நடைபெறவிருக்கும் ஹர்த்தாலிற்கு பூரண ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்குகின்றோம் என அனைவருககும் அறியத் தருகின்றோம்.

பல்கலைக்கழக மாணவர்கள் கஜன் மற்றும் சுலக்ஷன் ஆகிய இருவரும் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

கடந்த காலங்களில் நடந்த அசாதாரண சூழ்நிலையை தோற்றுவிப்பதற்கும் அன்றைய சில பொலிஸாரின் அசமந்தப் போக்கினால் நாம் கடந்த 30 வருடங்களிற்கு மேலாக பாரிய இன்னல்களையும் இழப்புக்களையும் சோகங்களையும் துன்பங்களையும் கடந்து இன்று அமைதியான சூழலில் வாழ்ந்து வருகின்ற இந்நேரத்தில் மீண்டும் பழைய நிலைமைக்கு சென்று விடுவோமோ என்ற ஐயப்பாடு ஒவ்வோர் மனதிலும் எழுகின்றது.

மீண்டும் ஒருமுறை இருண்ட யுகத்தில் தள்ளி விடாமலும் ஒற்றுமையாகவும் சந்தோசமாகவும் வாழவும் வேண்டி நடைபெறவுள்ள பூரண ஹர்ததாலிற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டும் என அக்கட்சியின செயலாளர் எஸ். விஜயகாந்த் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ-7)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ இறந்தவர்கள் திரும்புவதில்லை. கழிந்த இரவு மீண்டும் தோன்றுவதில்லை ஓய்ந்த பேரலை புதிதாக வருவதில்லை. அதுபோல் மனிதனும் அதே உடலில் மறுபடியும் புகுவதில்லை. ஆதலால் மனிதனே இறந்த காலத்தை வழிபடுவதை விட்டு நிகழ்காலத்தை வழிபடுமாறு உன்னை அழைக்கின்றோம்.

❖ கழிந்ததை எண்ணி வருந்துவதைத் தவிர்த்து தற்கால முயற்சிகளில் ஈடுபடுமாறு உன்னை அழைக்கின்றோம்.

❖ மறைந்தும் அழிக்கப்பட்டும் ஒழிந்த பாதைகளைத் தேடித் திரும்பவும் கண்டு பிடிப்பதில் ஆற்றலை வீணாக்குவதைவிட்டு பக்கத்தில் உள்ள அகன்ற புதிதாக அமைந்த பாதைகளைச் சேருமாறு உன்னை அழைக்கின்றோம். புத்திசாலி இதை அறியட்டும்.

❖ உண்மையான நம்பிக்கை பற்றிய கருத்தை மீண்டும் நம்மிடம் உயிர்ப்பிக்க வேண்டும். நம்மிடமுள்ள நம்பிக்கையை மறுபடியும் விழித்தெழச் செய்யவேண்டும்.

❖ அதன்பின்னர் நமது நாட்டினர் முன்பு நிற்கும் துயரங்கள் அனைத்தையும் நாமே மெல்ல மெல்லத் தீர்த்து விடலாம்.

# யாழ். செயலக தெரிவு அணி வெற்றி







புனர்வாழ்வு பெற்றவர்கள் விளையாட்டு கழகங்களுடன் நட்புறவையும் சகோதரத்துவத்தினையும் மேம்படுத்தும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட உதைபந்தாட்ட தொடரின் இறுதியாட்டத்தில் யாழ்.பிரதேச செயலக தெரிவு அணி மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக தெரிவு அணி மோதியது.இறுதி ஆட்ட நேர முடிவில் யாழ்.பிரதேச செயலக தெரிவு அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தினை தனதாக்கிக் கொண்டது.

யாழ்.செயலக தெரிவு அணி சார்பில் கொன்சலஸ்,ஜக்சன் தலா ஒவ்வொரு கோல்களை தமது அணிக்காக பெற்றுக்கொடுத்தனர்.

இவ் ஆட்டம் துரையப்பா மைதானத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.இதற்கு முன்னர் நடைபெற்ற அரை இறுதியாட்டத்தில் யாழ். பிரதேச செயலக தெரிவு அணியை எதிர்த்து கரவெட்டி பிரதேச செயலக அணி மோதியது.

முதற்பாதியாட்டத்தில் சிறப்பாக ஆடிய இரு அணிகளும் எவ்வித கோல்களும் பெறப்படாது ஆட்டம் சமநிலையானது. இரண்டாவது பாதியாட்டத்தின் 37ஆவது நிமிடத்தில் யாழ்.பிரதேச செயலக அணிக்கு தண்ட உதைப்பிலான கோல் வாய்ப்பு கிடைத்தது.

அதனை கோலாக மாற்றினார் யாழ். பிரதேச செயலக தெரிவு அணி வீரர். ஆட்டம் தொடர்ந்தது 42 ஆவது நிமிடத்தில் கரவெட்டி பிரதேச செயலக தெரிவு அணிக்கு நேர் உதைப்பு மூலமான கோல் வாய்ப்பை தவற விட்டனர். இறுதி நேர முடிவில் 01.00 என்ற ரீதியில் வெற்றியீட்டி இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றிருந்தது யாழ்.பிரதேச செயலக தெரிவு அணி. (கு)

## அடுத்த சுற்றில் அல்வாய் மனோகரா

வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியை நடத்தி வருகின்றது. அண்மையில் நடைபெற்ற போட்டியில் அல்வாய் மனோகரா அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதியது.

முதல் பாதியில் இரு அணிகளும் தலா ஒரு கோல் போட்டு சமநிலையில் இருந்தது. 2 ஆம் பாதியில் எந்த கோல்களும் இன்றி சமநிலையில் நிறைவடைந்தது. தண்ட உதையில் 5:4 என்ற கோல் கணக்கில் அல்வாய் மனோகரா அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக் முன்னேறியது. (க)

## மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மின்னொளியிலான கிரிக்கெட் முடிவுகள்

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்திவரும் மின்னொளியிலான அணிக்கு 5 ஓவர் 6 பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை அதிகாலை நடைபெற்ற போட்டி முடிபுகள் நடைபெற்ற 5 ஆவது போட்டியில் வல்வெட்டித் துறை நெடியகாடு ஏ அணியை எதிர்த்து கரவெட்டி ஞானம்ஸ் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி ஞானம்ஸ் அணி 5 ஓவர்களில் 72 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வல்வெட்டித்துறை நெடியகாடு ஏ அணி 22 ஓட்டங்களை பெற்றது. இறுதியில் 50 ஓட்டங்களினால் கரவெட்டி ஞானம்ஸ் அணி வெற்றிபெற்று அடுத்த சுற்றுப் போட்டிக்கு தகுதி பெற்றது.

7 ஆவது போட்டியில் அல்வாய் மனோகரா அணியை எதிர்த்து சாவகச்சேரி சிவன் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய அல்வாய் மனோகரா அணி 5 ஓவர்களில் 22 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி சிவன் அணி 24 ஓட்டங்களைப் பெற்றது. இறுதியில் 5 விக்கெட்டுகளினால் சாவகச்சேரி அணி வெற்றிபெற்று அடுத்த சுற்றுப் போட்டிக்கு தகுதி பெற்றது.

8 ஆவது போட்டியில் பருத்தித்துறை வீனஸ் அணியை எதிர்த்து இணுவில் கலைஒளி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய பருத்தித்துறை வீனஸ் அணி 5 ஓவர்களில் 42 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இணுவில் கலைஒளி அணி 44 ஓட்டங்களைப்பெற்றது. இறுதியில் 2 விக்கெட்டினால் இணுவில் கலை ஒளி பி வெற்றிபெற்று அடுத்த சுற்றுப் போட்டிக்கு தகுதி பெற்றது. 9 போட்டியில் தொல்புரம் அம்பாள் அணி 42 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வல்வெட்டி நெற்கொழு கழுகு அணி 44 ஓட்டங்களை வெற்றி பெற்று அடுத்த சுற்றுப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

10 ஆவது போட்டியில் அச்சுவேலி கோல்ட் ஸ்ரார் அணியை எதிர்த்து கொக்குவில் காமாட்சி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் காட்சி அணி 5 ஓவர்களில் 64 ஓட்டங் களை பெற்றது. பதிலுக்குத் துடுப் பெடுத்தாடிய அச்சுவேலி கோல் ஸ்ரார் அணி24 ஓட்டங்களை பெற்றது. இறுதியில் 40 ஓட்டங்களினால் கொக்குவில் காமாட்சி அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுப் போட்டிக்கு தகுதி பெற்றது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## சோமஸ்கந்தன் வி.கழக கரப்பந்தாட்ட முடிபுகள்

புத்தூர் சோமஸ்கந்தன் விளையாட்டுக்கழகம் நடத்தும் மின்னொளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் A பிரிவினர்களுக்கான அண்மையில் நடைபெற்ற முதலாவது அரைஇறுதி போட்டியில் ஆவரங்கால் மத்திய வி.க. எதிர்த்து அச்சுவேலி யூத் வி.க. மோதியது. இதில் ஆவரங்கால் மத்திய வி.க (16:25,21:25,22:25) வெற்றியீட்டிக்கொண்டு இறுதி போட்டிக்கு தெரிவாகியது.

இரண்டாவது அரைஇறுதி போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க எதிர்த்து இளவாலை மத்திய வி.க மோதியது.

இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க (22:25,27:29,23:25) வெற்றியீட்டிக்கொண்டு இறுதி போட்டிக்கு தெரிவாகியது. (கு)

## 3 ஆம் இடத்தினை தனதாக்கியது கரவெட்டி பிரதேச செயலக அணி



புனர்வாழ்வு பெற்ற வீரர்களை உள்ளடக்கிய யாழ்ப்பாண பிரதேசங்களை கொண்ட தெரிவு அணிகளுக்கிடையிலான 3ம் இடத்திற்கான உதைபந்தாட்ட போட்டி (23. 10.2016) அன்று துரையப்பா விளையாட்டு கழக மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் உடுவில் பிரதேச செயலக தெரிவு அணியை எதிர்த்து கரவெட்டி பிரதேச செயலக தெரிவு அணி மோதியது.

முதற்பாதியாட்டத்தில்துஷிதொடர்ச்சியாக மூன்று கோல்களை போட்டு அசத்தினார்.அணியின் மேலும் ஒரு கோல் ரதன் பெற்றுக்கொடுக்க முற்பாதியாட்டம் 04:00 என்ற அடிப்படையில் முடிவுற்றது.

இரண்டாவது பாதியாட்டத்தில் உடுவில் பிரதேச செயலக அணி முதல் கோலை பதிவு செய்தது. அணியின் 5ஆவது கோலை ரதன் போட இறுதியாட்ட நேர முடிவில் உடுவில் பிரதேச செயலக தெரிவு அணியை 05:01 என்ற ரீதியில் வீழ்த்தி 3ம் இடத்தினை தனதாக்கியது கரவெட்டி பிரதேச செயலக தெரிவு அணி. கரவெட்டி அணி சார்பில் துஷிகரன்03, ரதன் 2 கோலினை போட்டனர். (கு)



2016ஆம் ஆண்டுக்கான இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் நடத்தப்படும் மாவட்ட ரீதியிலான கராத்தே போட்டி அண்மையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் பல வீர, வீராங்கனைகள் பங்கு கொண்டன.இதில் மகாதேவா இல்ல வீர, வீராங்கனைகள் அதிகூடிய பதக்கங்களை பெற்றுள்ளனர்.

மாவட்டத்தில் வெற்றி பெற்ற மாணவர்கள்,நடுவர்கள், மாவட்ட சங்க நிர்வாகிகள் மற்றும் கராத்தே பயிற்சி ஆசிரியர் சென்.சே.விஜயராஜ் ஆகியோரை படத்தில் காணலாம்.

# வெடிபொருட்கள் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முள்ளியவளை பிரதேச உப அலுவலகத்தின் வளாகத்தில் இருந்து ஆபத்தான வெடிபொருட்கள் இரண்டு முல்லைத்தீவு விசேட அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது, குறித்த அலுவலகத்தின் அருகில் முல்



லைத்தீவு மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கட்டிட அபிவிருத்தி வேலைகள் நடைபெற்று வருகின்றது.

இதன்போது நிலமண் அகழ்ந்தெடுக்கப்பட்ட நிலையில் குறித்த இரண்டு வெடிபொருட்களைத் தொழிலாளர்கள் கண்டெடுத்தனர்.

இதனையடுத்து முள்ளியவளை பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் விசேட அதிரடி படையினருக்கு தகவல் வழங்கியதையடுத்து குறித்த வெடிபொருட்கள் விசேட அதிரடி படையினரால் எடுத்து செல்லப்பட்டது. (செ-2,310)

# பாடசாலை மாணவன் சடலமாக மீட்பு

(கெப்பெடிபொல)

வெலிமடை - கெப்பெடிபொல - எரபெத்த ஆற்றில் குளிக்கச் சென்ற 16 வயது பாடசாலை மாணவன் ஒருவன், நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கெப்பெடிபொல மத்திய மகா வித் தியாலயத்தில் தரம் 11இல் கல்வி பயின்று வந்த, ஹிம்பிலியகொல்ல பிரதேசத்தை சேர்ந்த சிறுவனே இவ்வாறு பலியாகியுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற மேலதிக வகுப்பை முடித்துவிட்டு குறித்த ஆற்றுக்கு சக நண்பர்களுடன் குளிக்கச் சென்றபோது இந்த மாணவன் நீரில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போனதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பின்னர் பிரதேசவாசிகள் நடத்திய தேடுதலிற்கு அமைய நேற்று குறித்த சிறுவனின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்த மேலதிக விசாரணைகளை வெலிமடை பொலிஸார் மேறகொண்டு வருகின்றனர். (செ)

# மின்சாரம் தாக்கி ஒருவர் பலி

(திருகோணமலை)

திருகோணமலை, புல்மோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 8 ஆம் கட்டைப் பகுதியில் மின்சாரம் தாக்கி, ஒருவர் உயிரிழந்துள்ளார் என புல்மோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

அப்பகுதியிலுள்ள ரஜமகா விகாரையில் இடம்பெற்ற நிகழ்வொன்றுக்குக் கட்டப்பட்டிருந்த கொடியினை கழற்றிக் கொண்டிருந்த போது, பக்கத்திலிருந்த மின்கம்பம் மற்றும் கடத்தியில் கொடிபட்டதனால் மின்சாரம் தாக்கி அவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில், விக்கிரமசிங்க (வயது 54) என்பவரே உயிரிழந்துள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ)

# வாள்வெட்டுக்கு உரிமை கோரியது ஆவா குழு!

(யாழ்ப்பாணம்)

யாழ் சுன்னாகம் பகுதியில் நேற்று முன்தினம் பொலிஸார் மீது நடத்தப்பட்ட வாள்வெட்டு சம்பவத்திற்கு உரிமைகோரி ஆவா குழு என்ற அடையாளப்படுத்தலுடன் நேற்றைய தினம் யாழ்.நகர பகுதியிலும், பாடசாலைகள் மற்றும் பத்திரிகை நிறுவனங்கள் ஆகிய இடங்களிலும் துண்டுபிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளது. அடையாளம் தெரியாத சில நபர்களால் இந்த பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

குறித்த துண்டு பிரசுரத்தில் அசுத்தங்கள் அகற்றப்படும் என்ற தலைப்பில் சுன்னாகம் தாக்குதல் சம்பவத்திற்கு உரிமை கோரப்பட்டுள்ளதுடன், நாம் சில அசுத்தங்களுக்கு எதிராகவே செயற்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

எனினும் இந்த துண்டுப்பிரசுரம் வேண்டுமென்றே விநியோகம் செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி இந்த அநாமதேய துண்டுப்பிரசுரங்களால் யாழ்.குடாநாட்டில் நேற்று சிறு பதற்றமும் ஏற்பட்டிருந்தது. (செ-4)

# கொழும்பில் இன்று...

ஒன்றை நடத்தவுள்ளது.

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட பொலிஸாரின் நடவடிக்கையைக் கண்டித்தும், மாணவர்களின் படுகொலை தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணை மற்றும் நீதி கோரியும் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும் முழு அடைப்பு போராட்டத்துக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் தார்மீக ஆதரவினை வழங்குகின்றதாக அறிவித்துள்ளது.

இன்றைய தினம் பாடசாலைகளின் செயற்பாடுகளையும் நிறுத்தி கல்விச்சமூகம் ஆதரவு தெரிவிக்க வேண்டும் எனவும் இலங்கை ஆசிரியர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

மேலும் இதேவேளை பல்கலைக்கழக மாணவர்களின் கொலை தொடர்பாக தெற்கின கவனத்தை ஈர்ப்பதற்காக இன்று கொழும்பு புறக்கோட்டையில் மாலை 2.00 மணியளவில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றும் நடைபெறவுள்ளதாகவும் அச் சங்கம் அறிவித்துள்ளது. (செ-11)

# புதிய அரசியல்...

மேலும், அதிகார பகிர்வு என்பது சமஷ்டியா? அல்லது ஒற்றையாட்சியா? என்ற சொற்பிரயோகத்தில் இல்லை, அது உள்ளடக்கத்தில்தான் தங்கியுள்ளது என்று அவர் கூறினார்.

இந்நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், இந்தியா சமஷ்டி முறையிலான நாடு. ஆனால், ஒற்றையாட்சி முறைகளும் இருப்பதாக ஆய்வாளர்களில் ஒரு சாரார் தமது கருத்துக்களை முன் வைத்திருக்கின்றார்கள். மற்றுமோர் சாரார் இந்தியா ஒற்றையாட்சி முறையிலான நாடு. ஆனால், சில சமஷ்டி முறையிலான ஒழுங்குகள் இருப்பதாக கூறுகின்றார்கள் என்றார்.

மாகாண விவசாய அமைச்சர் கே. துரைராஜசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அகமட், மாகாண காணி அமைச்சர் ஆரியவதி கலப்பதி, அவைத் தலைவர் சந்திரதாஸ கலப்பதி, துணை அவைத் தலைவர் பிரசன்னா இந்திரகுமார், நாடாளுமன்ற உறுப்பினர் ஜி. சிறிநேசன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (செ-11)

# இன்று...

கடந்த 20 ஆம் திகதி வியாழக்கிழமை நள்ளிரவு வேளையில் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மூன்றாம் வருட மாணவர்கள் இருவர் கொக்குவில் குளப்பிட்டிப் பகுதியில் படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்து காலை-06 மணி முதல் மாலை-06 மணி வரை வடக்கு மாகாணத்திலுள்ள சகல வர்த்தக நிறுவனங்கள், வியாபார நிலையங்கள் அனைத்தையும் பூட்டி, பாடசாலைகள், நீதிமன்றங்கள் உட்பட அலுவலகங்கள் அனைத்தையும் புறக்கணித்து, போக்குவரத்துச் சேவைகளையும் புறக்கணித்து முழுவதுமாக வடக்கில் ஒரு பூரண ஹர்த்தால் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற வேண்டும் என தமிழ் அரசியல் கட்சிகள் இணைந்து அழைப்பு விடுத்திருந்தன.

அந்த வகையில் இன்றைய தினம் வடக்கில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்கள் அனைத்தையும் மூடுமாறு வர்த்தக சங்கங்களும், தனியார் அரச பேருந்துகள் சேவையில் ஈடுபட வேண்டாம் என வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சும் கோரியுள்ளது.

இந்நிலையில் இன்றைய தினம் வடக்கு முழுவதும் பூரண கடையடைப்பு இடம்பெறவுள்ளதுடன் அனைத்து தரப்பும் ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளது. பயணிகள் போக்குவரத்து பேருந்து சங்கங்கள் மற்றும் வணிகர் கழகங்கள், வடமாகாண கடற்தொழில் சங்கங்களின் சம்மேளனம், வடக்கில் உள்ள அனைத்து பொது அமைப்புக்கள், சங்கங்கள என பல தரப்பட்ட தரப்பினரும் தமது ஆதரவை தெரிவித்துள்ளன.

இதே போன்று அரச பணியாளர்கள், வங்கி நிறுவனங்கள் என சகல திணைக்களங்களும் மாணவர் கொலையை கண்டித்தும அவர்களுக்கு நீதி கோரியும் இடம்பெறும் ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவு வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழர்கள் மீது ஒவ்வொரு ஆட்சியாளர்களின் காலங்களில் அரச பயங்கரவாத நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை ஒவ்வொன்றும் தமிழ் மக்களின் உயிர்களை பறித்த வண்ணமே உள்ளன. ஆயுதம் தாங்கிய பொலிஸார் வீதிகளில் நின்று பல்கலைக்கழக மாணவர்களை துப்பாக்கியால் சுடுவது என்பதை சாதாரணமாக கருத முடியாது. சமாதான காலத்தில் நடைபெற்ற பல்வேறு சம்பவங்களில் பொலிஸாருக்கு உயிர் ஆபத்து ஏற்பட்டதாக எந்த ஒரு சம்பவங்களும் பதிவு செய்யப்படவில்லை. அதற்கான சான்றுகளும் இல்லை.

இந்த நிலையில் பொலிஸார் தமக்கு உயிர் ஆபத்து இல்லாத நிலையில் மோட்டார் சைக்கிளில் சென்ற குறித்த மாணவர்களை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காது, கொலை செய்தமை ஏற்றுக் கொள்ளப்பட முடியாத ஒன்றாகும். இந்நிலையில் மாணவர்களின் படுகொலைக்கு ஒட்டுமொத்த தமிழினமும் நீதி கோர வேண்டும்.

அரச பயங்கரவாதம் மீண்டும் வடக்கு மண்ணில் தலையெடுக்க அனுமதிக்கக் கூடாது என்ற தீர்மானத்துடனும், வைராக்கியத்துடனும் இன்றைய தினம் வடக்கு மாகாணம் முழுவதிலும் முன்னெடுக்கப்படுகின்ற பூரண ஹர்த்தாலுக்கு அனைத்து தரப்பும் பூரண ஆதரவை வழங்க வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியன மற்றும் பல்வேறுபட்ட அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள் கோரியுள்ளன. (செ-4-9)

# மாணவர்களின்...

கதறி அழுதது அனைவரது கண்களிலும் கண்ணீரை வரவைத்தது.

துப்பாக்கியினால் சுடுவதற்கு எங்கள் நண்பர்கள் பறவைகளா? என ஆவேசத்துடன் சில மாணவர்கள் தமது கைகளை நிலங்களில் குத்தி விரக்தியுடன் கதறி அழுதார்கள். இவ்வாறாக இரு மாணவர்களது இறுதி கிரியைகளும் கண்ணீர் சிந்தியபடி உணர்வு பூர்வமாக நடைபெற்றது. மாணவர்களின் இறுதிக் கிரியைகளிற்கு முன்னர் கிளிநொச்சியிலும் யாழிலும் அமைதி வழி போராட்டங்களும் இடம் பெற்றிருந்தன. (செ-4)

# துப்பாக்கிச் சூடு...

ஆணைக்குழுவின் செயலாளர் ஆரியதாஸ குரே அவர்களைத் துரத்திப் பிடித்து கைது செய்ய அல்லது முன்னால் இருக்கும் பொலிஸ் சோதனைச் சாவடிக்கு அறிவிப்பதே பொலிஸார் செய்ய வேண்டியது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்.பல்கலை மாணவர்கள் மீதான துப்பாக்சி சூடு குறித்து கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே ஆரியதாஸ குரே மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

மேலும் பொலிஸாரின் ஆணையை மீறுகிறார்கள் என்பதற்காக துப்பாக்கிச் சூடு நடத்துவது குற்றவியல் சட்டத்தின் படி தவறானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோல் பொலிஸார் ஏதேனும் வாகனத்தை நிறுத்தும்படி ஆணை பிறப்பித்தால், அதற்கு இணங்கி அவர்கள் கோரும் உரிய தகவல்களை கொடுத்து, ஒத்துழைப்பு நல்க வேண்டியது அனைத்துப் பிரஜைகளின் கடமையாகும் எனவும் ஆரியதாஸ தெரிவித்துள்ளார். (செ-11)


# போராட்டங்களுக்கு...

கழக மாணவர்கள் இருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்த சம்பவம் சந்தேகத்திற்கு இடமின்றி குற்றம் என குறிப்பிட்ட அவர், இது மனித உரிமை வேலைத்திட்டங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அச்சுறுத்தல் எனவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் அரசாங்கம் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். (செ)

# பொலிஸாரை தண்டித்தமையை ஏற்றுக்கொள்ள முடியாது!

## கண்டனம் தெரிவிக்கிறார் மேர்வின் சில்வா



(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் இரண்டு பல்கலைக்கழக மாணவர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தில் தொடர்புபட்டதாகக் கூறப்படும் பொலிஸார் தண்டிக்கப்பட்டமையை முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கண்டித்துள்ளார்

நேற்று முன்தினம் தமது அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது அவர் இந்த செயலை கண்டிப்பதாக தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் பாதுகாப்பை கருத்திற் கொண்டே பொலிஸ் சோதனை சாவடி அமைக்கப்பட்டிருந்தது.

இதன்போது நிதானமின்றிய நிலையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரை பொலிஸார் இடை மறித்தனர்.

எனினும் அதனை பொருட்படுத்தாது மோட்டார் சைக்கிளில் சென்றோர் பயணித்த போது பொதுமக்களின் நலன்கருதியே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

இந்தநிலையில் நாட்டை காத்த வீரர்கள் என்றும் பார்க்காமல் விபத்து நடைபெற்ற விரைவைக் காட்டிலும் சம்பவத்தில் தொடர்புடைய பொலிஸார் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கபபட்டுள்ளனர்.

இது நாட்டை காத்த படை வீரர்களுக்கு கௌரவக் குறைச்சலை ஏற்படுத்துகின்ற செயலாகும் என்றும் மேர்வின் சில்வா தெரிவிததுள்ளார்.

மேலும் சர்வதேச கோரிக்கைக்கு ஏற்ப இவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படுமானால் அதனை தாம் கண்டிப்பதாகவும் மேர்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார். (செ)

# காற்றுடன் கூடிய மழை வீழ்ச்சி

(கொழும்பு)

நாட்டின் வடக்கு தெற்கு மற்றும் மேல்மாகாணங்களில் அடுத்துவரும் நாட்களில் அதிகளவிலான மழை வீழ்ச்சி பதிவாகும் என வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் மொஹமட் சாலி தெரிவித்தார.

இதனடிப்படையில் அதிகளவிலான மழை வீழ்ச்சி மேல் மாகாணத்தில் பதிவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (செ)

# யாழ்.பல்கலைக்...

ஒன்றியம் எச்சரித்துள்ளது..

இறந்த இரு மாணவர்களுக்கும் நட்டஈடு வழங்கப்பட வேண்டும், சிறுவயதிலிருந்து அவ்விரு மாணவர்களையும் வளர்ப்பதற்கு ஏற்பட்ட செலவையும் அவ்விரு மாணவர்கள வேலை செய்வதன் மூலம் கிடைக்கின்ற தொகையையும் அவ்விரு மாணவர்களின் பெற்றோர்களுக்கும் இழப்பீட்டுத் தொகையை மாதாந்தம் வழங்க வேண்டும்.

பாடசாலை மாணவி வித்தியா கொலை வழக்கிற்கு இதுவரை நீதி கிடைக்காதது போல எமது மாணவர்களுக்கும் நீதி கிடைக்காமல் போவதை தவிர்க்க வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கொக்குவில் பகுதியில் கடந்த 20-ம் திகதி வியாழக்கிழமை நள்ளிரவு இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் சுன்னாகம் கந்தரோடைப் பகுதியினைச் சேர்ந்த விஜயகுமார் சுலக்சன் (வயது 24), கிளிநொச்சி - இரணைமடுப் பகுதியினைச் சேர்ந்த நடராஜா கஜன் (வயது 23) என்னும் இரு இளைஞர்கள் மேற்படிச் சம்பவத்தில் உயிரிழந்திருந்தனர்.

இதில் உயிரிழந்த மாணவர் ஒருவரின் இடப்பக்க விலாப் பகுதியின் ஊடாக துப்பாக்கி சன்னம் பாய்ந்து அவருடைய நெஞ்சை பிளந்து சென்றுள்ளது என பிரேத பரிசோதனை அறிக்கை தெரிவித்திருந்தது.

இந்த படுகொலைக்கு நீதி கோரும் போராட்டம் ஒன்று நேற்றைய தினம் யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக நடைபெற்றது. இதன் போது கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் வடக்கு மாகாண ஆளுநர் ஊடக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு கோரிக்கை கடிதம் ஒன்றும் பல்கலையின் அனைத்து பீட ஒன்றியங்களினால் அனுப்பி வைக்கப்பட்டது. இந்த கடிதத்திற்கு ஜனாதிபதி உரிய பதில் அளிக்காவிட்டால் தமது போராட்டமும் தொடரும் என மாணவர் ஒன்றிய தலைவர் அறிவித்துள்ளார். (செ-4)

# யாழ்.செயலகம்...

தமிழ் மண்ணில் இனியும் படுகொலைகள் வேண்டாம்! என்ற கோசத்துடன் பொலிஸாரின் துப்பாக்கி சூட்டின் காரணமாக யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் படுகொலை செய்யப்பட்டதற்கு நீதி கோரி ஆயிரக்கணக்கான மாணவர்கள் நேற்றைய தினம் யாழ். மாவட்ட செயலகம் முன்பாக திரண்டிருந்தனர். இந்த போராட்டம் தொடர்ந்து ஏ9 வீதியை வழிமறித்தும் அமைதி வழியிலான போராட்டமாக முன்னெடுக்கப்பட்டது. இந்த போராட்டத்தில் ஆயிரக்கணக்கான யாழ். பல்கலைக்கழக மாணவர்களும், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

யாழ்.குடாநாட்டில் இடம்பெற்ற பாரிய போராட்டங்களில் ஒன்றாக இந்த போராட்டம் நடைபெற்ற நிலையில் அங்கு ஒரு பொலிஸார் கூட கடமைக்கு வரவில்லை. மாறாக நூற்றுக்கணக்கான புலனாய்வு பிரிவினர் அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.

யாழ்.குடாநாட்டில் தற்போது காணப்படும் பதற்றமான சூழ்நிலையை அடுத்து கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த விசேட புலனாய்வு பிரிவும் போராட்டத்தில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

ஆயிரக்கணக்கான மாணவர்கள் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தமையால் அங்கு பதற்ற நிலை காணப்பட்டதோடு, வீதி மறிப்பில் மாணவர்கள் ஈடுபட்டதால் பதற்றம் மேலும் அதிகரித்தது.

எனினும் எந்தவித குழப்பமும் இன்றி போராட்டம் நடைபெற்றது. போராட்டம் திசை திரும்பாமல் பீடங்களின் ஒன்றிய தலைவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் ஆகியோர் நெறிப்படுத்தியிருந்தனர்.

கொக்குவில் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் சுன்னாகம் கந்தரோடைப் பகுதியினைச் சேர்ந்த விஜயகுமார் சுலக்சன் (வயது 24), கிளிநொச்சி - இரணைமடுப் பகுதியினைச் சேர்ந்த நடராஜா கஜன் (வயது 23) என்னும் இரு இளைஞர்கள் மேற்படி சம்பவத்தில் உயிரிழந்திருந்தனர்.

மாணவர்களின் படுகொலைகள் நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை தோற்றுவித்துள்ள நிலையில், படுகொலைக்கு நீதி கோரும் போராட்டங்களும் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்க ஆரம்பித்துள்ளன. இந்த நிலையில் நேற்றைய தினம் யாழ்.மாவட்ட செயலகத்தை முடக்கும் போராட்டம் ஒன்று பல்கலைக்கழக மாணவர்களால் நேற்று காலை 8 மணிதொடக்கம் 12 மணிவரை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

முன்னதாக யாழ்.பல்கலைக்கழகத்தில் ஒன்று கூடிய மாணவர்கள் பஸ் மூலம் யாழ். மாவட்ட செயலகத்தை வந்தடைந்து, அங்கு கூடி தமது அமைதி வழியிலான தமது போராட்டத்தை ஆரம்பித்தனர். யாழ்.மாவட்ட செயலக வாயிற் பகுதிகள் மூன்றிலும் முற்றுகையிட்ட மாணவர்கள் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் எவரையும் உள்ளே அனுமதிக்கவில்லை. இதே போன்று வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகமும் மாணவர்களால் முற்றுகையிடப்பட்டு இருந்தது.

இதனால் இரு அலுவலகங்களிலும் கடமையாற்றும் ஊழியர்களும் வீதிகளிலேயே காத்து நின்றனர். சுமார் இரண்டு மணி நேரம வீதியின் கரையில் உட்கார்ந்து இருந்த மாணவர்கள் பின்னர் வீதியின் நடுப்பகுதிக்கு வருகை தந்து, அமர்ந்து வீதியை வழிமறிப்பு செய்தனர்.

இந்த போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த மாணவர்கள் மீண்டும் ஒரு ஆயுதமேந்திய போராட்டத்திற்கு வழி ஏற்படுத்தாதே, நல்லாட்சி அரசே மாணவர்களின் படுகொலைக்கு நீதி வேண்டும், பொலிஸாரின் துப்பாக்கிகள் எமது மாணவர்களை சுடுவதற்காக பயன்படுத்துவதா?, பொலிசாரின் அடக்குமுறையை நிறுத்து, நல்லாட்சி அரசின் காலத்தில் பாதுகாப்பில்லையா?, மாணவர்கள் மீதான அடக்குமுறையை நிறுத்து, பல்கலை மாணவர்களின் உயிரோடு விளையாடாதீர்கள், மாணவர்களின் இழப்பிற்கு நியாயமான தீர்வு வேண்டும், நேற்றும் இன்றும் இதே நிலை நாளை?, இலஞ்சம் வாங்கும் பொலிஸாரின் அராஜகம் ஒழிக்க என எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

பின்னர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ள அறிக்கையை கலைப்பீட மாணவர் ஒன்றிய தலைவர் ரஜீவன் மாணவர்கள் முன்னிலையில் வாசித்து காட்டினார்.

அதன் பின்னர் ஜனாதிபதி, மற்றும் முதலமைச்சர் ஆகியோருக்கான அறிக்கை கையளிக்கப்பட்டது. இதன் பின்னர் போராட்டம் முடிபுக்கு கொண்டுவரப்பட்டு மாணவர்கள் அனைவரும் சுன்னாகத்தில் நடைபெற்ற சுலக்சனின் இறுதிக் கிரியையில் பங்கேற்க சென்றனர்.(செ-4)

# வடக்கு சுமுக...

மாகாண ஆளுநர் நிலுக்கா ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வேண்டுகோளுக்கமைய யாழ். குடாநாட்டின தற்போதைய நெருக்கடியான நிலைமையை ஆராய்வதற்காகவும் கருத்துக்களை அறிவதற்காகவும் நேற்றைய தினம் யாழ்.மாவட்டத்துக்கு வருகை தந்திருந்திருந்தார். அதன் போது யாழ். ஊடகஅமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலும் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கொலை செய்யப்பட்ட மாணவர்களின் விடயம் தொடர்பில் நாங்கள் சட்டத்தை மதித்து நடப்பவர்கள் என்ற வகையில் சட்டத்துக்குட்பட்டவகையில் தான் செயற்பட வேண்டும்.

நாம் யுத்தத்தில் இருந்து விடுதலையாகி முரண்பாடுகளை மறந்து இந்த நாட்டு மக்கள் அனைவரும் ஒரே நாட்டின் மக்கள் என ஒன்றுபட்டு வாழ இந்த நல்லாட்சி அரசில ஜனாதிபதி, பிரதமர் இணைந்து சுமுகமான முறையில் ஆட்சி செய்கிறார்கள்.

ஆனால் இந்த நல்லாட்சிக்கு இடையூறு விளைவிப்பதற்கு காத்துக்கொண்டு பலர் இருக்கிறார்கள். அந்த முகமூடிகளை கண்டு மக்கள் ஏமாற வேண்டாம்.

எதிர் காலத்தில் எமது நாட்டில் உள்ள அனைத்து மக்களுடைய நிறை குறைகளை அறிந்து சம உரிமை வழங்கப்படும் என்பதை நான் நம்புகிறேன்.

சில எதிர் சக்திகள் அரசியல் முகமூடிகளை பெற்றுக்கொண்டு உங்களுக்கும் எங்களுக்கும இடையில் எதிர்ப்பை உருவாக்குவதற்கு செயற்படுகிறார்கள். மக்கள் மத்தியில் ஜாதி,மதம் என்பவற்றை முன்னிறுத்தி எமக்கிடையில் பாகுபாடு கொண்டுவருவதற்கு மனிதாபிமானம் இன்றி இச்சக்திகள் செயற்பட்டு வருகின்றன.

வடக்கில் உள்ள நிலைமைகளைக் குழப்புவதற்குப் பல்வேறு குழுக்களும், அமைப்புக்களும் முயன்று வருகின்றன. ஆனாலும், அவற்றையெல்லாம் தாண்டி நாட்டில் வெற்றிகரமான ஆட்சி நடைபெற்று வருகின்றது.

அத்துடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தற்போது யாழ்ப்பாணத்தில் உருவாகியிருக்கிற நிலைமையைச் சுமுகமான முறையிலும், அமைதியிலும் தீர்த்து வைக்க வேண்டுமென நாங்கள் எதிர்பார்க்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

# மாணவர்களின்...

பொலிஸாரின் துப்பாக்கி சூட்டில் படுகொலையான மாணவர்களில் ஒருவரான விஜயகுமார் சுலக்சனின் இறுதிக்கிரியைகள் நேற்றைய தினம் நடைபெற்று அவரது பூதவுடல் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. இதில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

யாழ். கொக்குவில் பகுதியில் கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் சுன்னாகம் கந்தரோடைப் பகுதியினைச் சேர்ந்த விஜயகுமார் சுலக்சன் (வயது 24), கிளிநொச்சி - இரணைமடுப் பகுதியினைச சேர்ந்த நடராஜா கஜன் (வயது 23) என்னும் இரு இளைஞர்கள் உயிரிழந்திருந்தனர். இதில் கிளிநொச்சி மாணவனான கஜனின் இறுதி கிரியைகள் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் இடம்பெற்றிருந்தது. இதன் போதும ஆயிரக்கணக்கான மாணவர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

இந்த இரு மாணவர்களின் இறுதிக்கிரியைகளின் போதும் அவர்களது பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் வேலைக்கு சென்று கொண்டேபடித்த எம்மகன்கள் இப்போது படிப்பதற்கு உயிருடன் இல்லையே என்று கதறி அழுதது அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியது. இதே போன்று தம்மோடு சிரித்து உறவாடிய தமது நண்பர்கள் தம்மை விட்டு சென்றுவிட்டார்களே என மாணவ மாணவிகள்

23ஆம் பக்கம் பார்க்க....


## வீட்டுடன் காணி விற்பனைக்கு

கிராமக்கோட்டடி
பருத்தித்துறையில்
அமைந்துள்ள 2 1/2
பரப்புக்காணியுடன் கூடிய
பெரிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு
077 522 8485

## அமெரிக்க லொத்தர் விசா

2018ல் நீங்களும் அமெரிக்காவில்...
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!
விரையுங்கள் - இன்னும் 10 நாட்களே உள்ளன
0768226230
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற ஓர் அரிய சந்தர்ப்பம்
சென்ற வருடம் (2015) எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் 20 பேர் அமெரிக்க விசாவிற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
எம்மூடாக விண்ணப்பித்தவர்கள் விசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்.
யாழ்ப்பாணம் 0768226241
கிளிநொச்சி 0768226240
நெல்லியடி 0776699892
பருத்தித்துறை 0768226237
வல்வெட்டித்துறை 0776697960
V2 Travels www.facebook.com/v2tandt


# மரண அறிவித்தல்

இணுவிலை பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

## திருமதி புனிதவதி (மணி) பஞ்சலிங்கம்



*அவர்கள் 23.10.2016 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை-இராசம்மா தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்ற சின்னையா-சிதம்பரப்பிள்ளை ஆகியோரின் மருமகளும் காலஞ்சென்ற சி.பஞ்சலிங்கத்தின் மனைவியும் விக்கினேஸ்வரன் (வவா கனடா) விஜயகுமாரி (பகுதி தலைவர், யா/இணுவில் இந்துக் கல்லூரி) மாலினி (கனடா), சியாமளா (கனடா), ஷாலினி (கனடா) தயந்தினி (உத்தியோகத்தர், மாகாண காணி ஆணையாளர் திணைக்களம் வ.மா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரஞ்சினிதேவி (கனடா) ஜெயரூபன் (பிரதி அதிபர், யா/வீமன்காமம் மகா வித்தியாலயம்) விக்கினேஸ்வரன் (வரதன் கனடா), நவீனச்சந்திரன் (கனடா), சிவேந்திரன் (கனடா), சுபாஸ்கரன் (முகாமையாளர், ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ், சங்கானை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், விதுன், அபிநயா, அக்ஷயா, மதுராங்கி, விதுஜனன், நிரேகா, அக்ஷயன்,அகல்யன், விதுசன், வர்ஷனா, ஹரிஷான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (மல்ரி ஒயில்), அதேதினத்தில் காலமான பரராசசேகரம் (கனடா) மற்றும் சரஸ்வதி (ஓய்வு பெற்ற செயலாளர், வலி தெற்கு பிரதேசபை சுன்னாகம்), பாலச்சந்திரன், சிவபாக்கியவதி (கனடா), பொன்மலர், தவமலர், சண்முகலிங்கம் (சிறி கனடா) ஆகியோரின் சகோதரியும் இந்திராணி, நாகரெத்தினம் (கனடா) சொக்கலிங்கம் (ஓய்வு நிலை ஆசிரியர்), சித்தானந்தபவானி, கந்தசாமி (கனடா), சிவபாதசுந்தரம் (டோகா), விசுவலிங்கம் (ப.நோ.கூ.ச. அளவெட்டி), மதனகுமாரி (கனடா) மற்றும் காலஞ்சென்ற தியாகராசா, இராசலட்சுமி, கணேஸ்வரி மற்றும் கணேசலிங்கம் (கனடா) சிதம்பரநாதன் (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.10.2016) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல்
குடும்பத்தினர்
021 300 2496
077 6928 733

(C-6265)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.